
# ஆண்டறிக்கை 2012



## கொழும்புப் பல்கலைக்கழக
## கணினி கற்கைகள்
## நிறுவகம்

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம்

உள்ளடக்கம்


தொலைநோக்கும் இலக்கும் ........ 49
பணிப்பாளரின் கருத்து ........ 50
ஒரு பார்வை ........ 52
UCSC மீதான ஒரு கண்ணோட்டம் ........ 54
ஆளுகை ........ 56
கல்வி ........ 58
நிகழ்ச்சிகளும் மாணவர்களும் ........ 58
பட்டப்படிப்பு ........ 59
பட்டப் பின்படிப்புக் கல்வி ........ 65
வெளிவாரிப் பட்டங்களும் விரிவாக்கல் கற்கைநெறிகளும் ........ 67
வெளிநாட்டு மாணவர்கள் ........ 72
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறிகள் ........ 72
ஆய்வு ........ 73
ஆய்வு, புத்தாக்கங்கள் மற்றும் பிரசுரங்களும் ........ 73
மாநாடுகள், கருத்தரங்குக்கள் மற்றும் செயலமர்வுகள் ........74
கிடைத்த விருதுகள் ........75
கல்விசார் ஆளணியினர் ........76
கல்வியல்லா ஆளணியினர்: நிரந்தர (P) ஒப்பந்த/ஒப்படைப்பு (C/A) ........ 77
நிதி ........ 79
மீண்டெழும் செலவினங்கள் ........ 79
மூலதனச் செலவினங்கள் ........ 80
கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை) ........ 80
கருத்திட்ட செலவினங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு) ........ 81
நிதிச்செயலாற்றுகை (செலவினங்கள்) ........ 82
நிதிச்செயலாற்றுகை (உழைத்த வருமானம்) ........ 82
நிதிச்செயலாற்றுகை ஆய்வு ........ 83
உட்கட்டமைப்பு வசதிகள் ........ 83
ஏனைய விபரங்கள் / இந்த அறிக்கையுடன் தொடர்புடைய செயலாற்றுகை ........ 84
கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் - 2012 ........ 85
கணக்காய்வாளரின் அறிக்கை - 2012 ........ 89
கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பிலான UCSC இன் கருத்து – 2012 ........ 99

## <u>கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம்</u>

2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையும் கணக்குகளும்

தொலைநோக்கும் இலக்கும்

---

### தொலைநோக்கு

புதிய அறிவினை உருவாக்குதல், விமரிசன ரீதியான ஆய்விற்கான ஒரு கலாசாரத்தை உருவாக்குதலும் நாட்டிற்கான சேவையையும் ஈடுபாட்டையும் போசித்தலும்

### இலக்கு

தேசிய அபிவிருத்தியில் பங்கேற்கக் கூடிய உயர் தொழில்நுட்பத் திறன்களுடன் உயர் ஒழுக்கநெறிகளையும் சமூகப் பொறுப்புடைமையையும் கொண்ட, ஆக்கத்திறன், ஆய்வுத்திறன் மற்றும் சுயாதீனமாக சிந்திக்கக் கூடிய ஆண்களையும் பெண்களையும் உருவாக்குதல்

கணினிக் கல்வியில் உயர் கற்கைத்துறை நிலையம் என்ற வகையில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) பட்டதாரி மற்றும் பட்டப் பின்படிப்பு மாணவர்களையும் அதேபோல் தகவல் தொழில்நுட்பத் (IT) துறையினரையும் இந்தத் துறையின் நவீன அபிவிருத்திக்குப் பயிற்றுவிக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்கின்றது. Z-புள்ளி பிரச்சினை காரணமாக புதிதாக சேர்த்துக்கொள்ளப்படுதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒத்திவைக்கப்பட்ட போதிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட 738 உள்ளகப் பட்டதாரிகளுக்கு நான்கு பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தில் (UCSC) அவர்களுக்கு தொடர்ந்து வழங்கிவருகின்றது. அத்துடன், 1267 விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு விஞ்ஞானத் தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பிலான தகவல் தொழில்நுட்பப் பயிற்சியை வழங்கியுள்ளதுடன், 2029 மாணவர்களுக்கு வெளிவாரியாக தகவல் தொழில்நுட்பமாணி (BIT) பட்டப் படிப்பினை மேற்கொள்ளவும் வாய்ப்பினை வழங்கியுள்ளது. 158 மாணவர்கள் முதுமாணிப் பட்டத்திற்காகச் சேர்ந்துள்ளதுடன், 10 பேர் ஆய்வுப் பட்டங்களுக்காக இணைந்துள்ளனர். கடந்த வருடங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களில் 392 பேர் பட்டப் படிப்பையும், 158 பேர் பட்டப் பின்படிப்பையும் பூர்த்தி செய்துள்ளனர். பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டின் மூலமாக உருவாக்கி வெளியாக்கப்பட்டவை முறையே 11% மற்றும் 65% ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் சகலவற்றுக்கும் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) பரீட்சையினை நடத்துவதையும் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம் செயற்படுத்தி வருவதுடன். இரண்டு பல்கலைக்கழகங்களில் 81 மாணவர்களுக்கு வெற்றிரமாக பிரதான பரீட்சையினை நடத்தியது.

ஏனைய பயிற்சி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) ஆய்வினூடாகப் புதிய அறிவினை உருவாக்குவதற்கு அதிக அழுத்தம் கொடுக்கின்றது. தேசிய அளவில் கல்விசார் பணிப்பகிஷ்கரிப்பு பிரச்சினை மூன்று மாதங்கள் நிலவிய போதிலும், ஆய்வுக் கருத்திட்டங்களுக்காக தேசிய ஆய்வு மையத்தின் (NRC) மானியங்கள் மூன்றையும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் (NSF) மானியங்கள் இரண்டையும் பெற்றுக்கொண்ட அதேவேளை, ஆளணியினர் 59 மாநாட்டு மற்றும் சஞ்சிகை ஆக்கங்களை வெளியிட்டுள்ளனர். கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) ஒரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக அமைச்சுக்களிலும் ஏனைய அரச நிறுவனங்களிலும் ஆலோசனைக் கருத்திட்டங்களை நடத்திச்செல்லவும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துள்ளது. மாணவர்கள் NBQSA, e-Swabhimani, வேர்ல்ட் சமிட் அவர்ட் (World Summit Award) மற்றும் கூகுல் சம்மர் கோர்ட் (Google Summer Code) ஆகியவற்றின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டுள்ளதுடன்/மற்றும் தேசிய, சர்வதேச நிகழ்வுகளில் வெற்றிகளை தொடர்ந்தும் திறமையான முறையில் அடைந்து வருகின்றனர். ஆளணியினர் சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பாக பல வெளிக் குழுக்கள், சபைகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களில் ஈடுபடுகின்ற அதேவேளை, மாணவர்கள், கிராமப்புறப் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு தகவல் தொழில்நுட்ப பரப்புதல் நிகழ்ச்சித் திட்டங்களைகளைத் தொடருகின்றனர். 20 வெளிநாட்டுக் குழுவினர்கள் உட்பட 182 பங்குபற்றுவோர்களை கவரும் வகையில் கொழும்பு பல்கலைக்கழக கணினிக்

கற்கைகள் நிறுவகமானது (UCSC) அவர்களது வருடாந்த சர்வதேச மாநாட்டினை வெற்றிகரமாக ஏற்பாடுசெய்து நடத்தியது. கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக (UCSC) மூன்று ஆளணி அங்கத்தவர்கள் அவர்களது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மற்றும் ICTA அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டனர்.

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தில் (UCSC) நீண்ட காலம் செய்யப்படாத பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி 2011 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, இதன் முதலாம் கட்ட கருத்திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 300 மாணவர்களுக்கான புதிய விரிவுரை மண்டபமொன்று பயன்பாட்டுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி செயற்பாடுகளை பலப்படுத்துவதற்காக கட்டட நீடிப்புச்செய்தல் வேலைகள் 2013 இல் பூர்த்திசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) நாட்டிலுள்ள மிகவும் தராதரம் வாய்ந்த கணினி ஆளணியினரை வைத்திருப்பதுடன், மனித வளப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக 19 கலாநிதிப் பட்டம் பெற்றோர்களை அதன் விரிவுரையாளர் குழாமை வலுவூட்டுவதற்காக வைத்துள்ளது. வெளிநாட்டு ஆளணிப் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டமானது 2011 இல் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டு தொடர்வதுடன், மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தை 2013 இல் நடைமுறைப் படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.

தற்போதுள்ள பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களின் பாடத்திட்டங்களை சர்தேச தரத்திற்கு அபிவிருத்தி செய்வதற்காக தொடர்ச்சியாக செயலாற்றி வருவதுடன் உயிரியல் தகவல் தொழில்நுட்பத்தில் புதிய பட்டப் பின்படிப்பினை தொடங்கியுள்ளதுடன், தகவல் முறைமை மற்றும் மென்பொருள் இயந்திரவியல் ஆகிய புதிய பட்டதாரிப் பட்டங்களுக்கு சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| **கல்வி (இணைந்தோர்/ பட்டம் பெற்றோர்)** | | | | |
| உள்ளகப் பட்டதாரி மாணவர்கள் | எல்லாம் | 739 | 737 | 738 |
| | உள்ளே | 236 | 238 | - |
| | வெளியே | 229 | 223 | 220 |
| விஞ்ஞானப் பட்டதாரி மாணவர்கள் | | 1023 | 1160 | 1267 |
| வெளிவாரி டிப்ளோமா | எல்லாம் | 4281 | 4287 | 4166 |
| | உள்ளே | 2514 | 2365 | 2029 |
| | வெளியே | 361 | 576 | 654 |
| வெளிவாரி உயர் டிப்ளோமா | எல்லாம் | 1863 | 2019 | 2390 |
| | உள்ளே | 688 | 863 | 974 |
| | வெளியே | 199 | 309 | 262 |
| வெளிவாரிப் பட்டப்படிப்பு | எல்லாம் | 1188 | 1293 | 1413 |
| | உள்ளே | 403 | 442 | 476 |
| | வெளியே | 140 | 129 | 172 |
| பட்டப் பின்படிப்பு | எல்லாம் | 443 | 531 | 523 |
| | உள்ளே | 177 | 143 | 158 |
| | வெளியே | 89 | 94 | 156 |
| விரிவாக்கல் நிகழ்ச்சிகள் | | 935 | 678 | 528 |
| **ஆய்வு** | | | | |
| ஆய்வு (தத்துவமாணி/ கலாநிதி) | எல்லாம் | 31/01 | 46/00 | 41/01 |
| | உள்ளே | 06 | 13 | 10 |
| | வெளியே | - | 1 | 3 |
| ஆய்வுக் கருத்திட்டங்கள் | எல்லாம் | 06 | 05 | 05 |
| | புதிய | 2 | 1 | 02 |
| பிரசுரங்கள் | | 69 | 63 | 59 |
| **ஆலோச னைக் கருத்திட்டங்கள்** | | | | |
| உள்நாடு | | 25 | 14 | 12 |
| வெளிநாடு | | 05 | 01 | 01 |
| **சமூகப் பொறுப்பு நிகழ்ச்சிகள்** | | 18 | 10 | 10 |

| | | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| ஆட்சி | | | | |
| நிரந்தர கல்விசார் ஆளணியினர் | எல்லாம் | 34 | 36 | 35 |
| | பேராசிரியர் | 02 | 02 | 02 |
| | கலாநிதி | 18 | 18 | 19 |
| நிரந்தர கல்விசார் உதவி ஆளணியினர் | | 04 | 02 | 04 |
| தற்காலிக கல்விசார் ஆளணியினர் (போதனாசிரியர்கள்) | | 15 | 11 | 12 |
| நிரந்தர நிருவாக மற்றும் கல்விசாரா ஆளணியினர் | | 35 | 35 | 34 |
| ஒப்பந்த அடிப்படையிலான ஆளணியினர் (அமைய மற்றும் பயிலுநர் உட்பட) | | 72 | 37 | 67 |
| ஆய்வு/கருத்திட்ட ஆளணியினர் | | 18 | 14 | 10 |
| நிதி | | | | |
| வருடாந்த மீண்டெழும் செலவினம் (மில்லியன்கள் – இலங்கை ரூபா) | | 80 | 92 | 111 |
| திறைசேரி ஒதுக்கம் (மீண்டெழும்) (மில்லியன்கள் – இலங்கை ரூபா) உண்மையானது | | 65 | 83 | 92 |
| திறைசேரி ஒதுக்கம் (மூலதனம்) (மில்லியன்கள் – இலங்கை ரூபா) உண்மையானது | | 5 | 16 | 19 |
| உழைத்த வருமானம் | | 123 | 159 | 195 |
| கொழு. பல். கணினி கற். நிறுவக (UCSC) பங்களிப்பு – பல். மானியம் (மில். – இலங். ரூ.) (உழைக்கப்பட்டது %) | | 31 (25%) | 22 (14%) | 27 (16%) |
| கொழு. பல். கணினி கற். நிறுவகத்தின் (UCSC) வரவுசெலவுத் திட்டம் (மில்லியன்கள் – இலங்கை ரூபா) | | 171 | 205 | 246 |
| ஆய்வு/கருத்திட்டம் (மில்லியன்கள் – இலங்கை ரூபா) | | 84 | 6.1 | 5.6 |
| ஒரு ஊழியருக்கான செலவு ஒரு வருடத்திற்கு (இலங்கை ரூபா '000 ) | | 457 | 578 | 670 |
| ஒரு மாணவனுக்கான செலவு ஒரு வருடத்திற்கு (இலங்கை ரூபா '000 ) திறைசேரி | | 108 | 125 | 149 |
| உட்கட்டமைப்பு | | | | |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | | 9,999 | 10,214 | 10,405 |
| கணினி : ஆளணியினர் | | 1:1 | 1:1 | 1:1 |
| கணினி : மாணவர்கள் (பொது மாணவர்கள்) | | 1:4 | 1:4 | 1:4 |
| (விசேட மாணவர்கள்) | | 1:1 | 1:1 | 1:1 |
| இடப் பயன்பாடு (ஊழியர்) (ச. மீ) | | 6.99 | 9.42 | 10 |
| இடப் பயன்பாடு (மாணவர்கள்) (ச. மீ) | | 1.89 | 1.90 | 2.0 |

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம் (UCSC) பற்றிய கண்ணோட்டம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினித் தொழில்நுட்ப நிறுவகம் (ICT) மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களம் (DCS) ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து 1978 ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ(1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கேற்ப, 1995 ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறு 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி கணினித் துறையில் உயர் கல்வியை வழங்குதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்ட உயர் கல்வி நிலையமாக கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம் (UCSC) உருவாக்கப்பட்டது. இது தற்போது கணினி விஞ்ஞானம், மென்பொருள் இயந்திரவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் முறைமையினை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. சட்டத்தின் கருத்துப்படி இதுவோர் உயர் கல்வி நிறுவனமாகும். கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) கட்டளைச் சட்டம் 2002 நவம்பர் 15 ஆம் திகதி வர்த்தமானியில் (வர்த்தமானி இல. 1262/32) பிரசுரிக்கப்பட்டதுடன், டிஜிடல் குற்றவியல் சட்டத்தன்மைக்கான நிலையமாக உள்ளடக்குவதற்கு திருத்தமொன்று 2011 யூலை 22 ஆம் திகதி வர்த்தமானியில் (வர்த்தமானி இல. 1715/32) திருத்தமொன்று செய்யப்பட்டது.

**சுருக்கமான வரலாறு**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணிதவியல் திணைக்களத்தில் புள்ளிவிபரவியலுக்கெனத் தனியானதொரு அலகு 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரே கணினிக் கல்வி கற்பித்தலானது முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. பின்பு, பேராசிரியர் வீ.கே. சமரநாயக்கவின் வழிகாட்டலின்படி, புள்ளிவிபரவியல் அலகானது, புள்ளிவிபரவியல் ஆலோசனை மற்றும் தரவுச் செய்முறைச் சேவை நிலையமாக விருத்தி செய்யப்பட்டது. இது பல எதிர்கால அபிவிருத்திகளுக்கு வழிகோலியது. 1985 ஆம் ஆண்டளவில் இந் நிலையமானது புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களமாக வளர்ச்சிகண்டது. இத் திணைக்களத்தினது பிரதான பணியானது புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத்தில் விசேட பட்டப்படிப்பினை நடாத்துவதாகும். இத் திணைக்களமானது கணினி விஞ்ஞானச் சிறப்புக் கற்கை நெறிகளை நடாத்தி, ஒரு வருடத்தில் 40 மாணவர்களை உருவாக்கிய போதிலும், இது வளர்ந்துவரும் கணினி விஞ்ஞானத் துறைத் (CS) தேவையை ஈடுசெய்யப் போதியளவாக இருக்கவில்லை.

1997 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேரடியாகக் கணினி விஞ்ஞானத்திற்கு 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். எனினும், அந்த நேரத்தில் புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களத்தின் (DSCS) கணினி விஞ்ஞான உபபிரிவானது, தனியானதொரு திணைக்களமாக மாறினால் தான் கணினி விஞ்ஞானத்துறையில் வளர்ந்து வரும் தேவைகளைச் சமாளிக்கக் கூடியதாகவிருக்கும் என பலரால் அறியப்பட்டது. அதன் பயனாக 2001 இல், புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களமானது (DSCS) கணினி

விஞ்ஞானத் திணைக்களம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் எனும் இரு திணைக்களங்களாகப் பிரிக்கப்பட்டன.

கணினி விஞ்ஞானத் திணைக்களமானது ஒரு பீடத்தின் கீழ் இயங்குவதால் முகங்கொடுக்கும் வரையறைகளை இனங்கண்டு கொண்டதுடன், அதனது எதிர்கால வளர்ச்சி விரிவாக்கத்தை அடைந்து கொள்தற்காக பலமான தொழிற்றுறை தொடர்பொன்று இருப்பதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டது. தொழிற்றுறை நோக்கம் கொண்ட கணினித் தொழில்நுட்ப நிறுவனம் (ICT) மற்றும் அதிக எண்ணக்கரு நோக்கிலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினித் திணைக்களத்தையும் தந்திரோபாயமாக ஒன்றிணைப்பதன் முக்கியத்துவத்தை பல்கலைக்கழகம் விளங்கிக் கொண்டுள்ளது.

கணினி தொழில்நுட்ப நிறுவனமானது (ICT) தொழிற்றுறையினருடனும், அதேவேளை அதிகமான வெளிநாட்டு உதவி நிறுவனங்களுடனும் பலமான உறவுகளை வைத்திருந்தது. அதேபோல் ICT ஆனது வியாபார நடவடிக்கைகளில், யப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவராண்மை (JICA) சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை (Sida) மற்றும் ஏனைய உதவி நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து அதிகளவிலான வளங்களைப் பெற்று அவற்றை இலகுபடுத்தியது.

இந்த இணைப்பானது கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம் (UCSC) 2002 ஆம் ஆண்டு செம்ரெம்பர் 1 ஆம் திகதி பிறப்பதற்கு வழிகோலியது. பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க இதன் (UCSC) நிருமாணப் பணிப்பாளரானதுடன், அவரது தூரநோக்குச் சிந்தனையானது UCSC ஐப் பல வழிகளிலும் வெற்றியடைய வழிவகுத்தது. எல்லாவற்றின் மூலமாகவும் UCSC ஆனது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலே (ICT) சிறப்பு வாய்ந்த மத்திய நிலையமாக இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் நிலைநிறுத்திக்கொள்ள முடிந்துள்ளது.

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) நிருவாகக் கட்டமைப்பு**

இவ் வருடத்திலும் மூன்று திணைக்களங்களையும் ஆறு மத்திய நிலையங்களையும் கொண்டு தனது செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தலை தொடர்ந்து நடாத்தி வருகின்றது.

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) திணைக்களங்கள்**

பட்டதாரி கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்திற்கான அரச நிதியினை பல்கலைக்கழக னியங்கள் ஆணைக்குழு மூலம் கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) நேரடியாகப் பெற்றுக்கொள்கிறது. ஆண்டினுல் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பெறப்படும் நிதி போதாமையினால் உருவாக்கப்பட்ட வருமானமும் பட்டதாரி கல்விசார் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. கொழு. பல்கலை. கணினிக் கற்கை நிறுவகத்திற்கு (UCSC) மூன்று கல்விசார் திணைக்களங்கள் இருப்பதுடன் அவற்றுக்கான கல்விசார் ஆளணியினர் அவர்களது சிறப்புத்தேர்ச்சி மற்றும் கற்பித்தல் திறமை அடிப்படையில் இத் திணைக்களங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். பட்டதாரி, பட்டப் பின்படிப்பு மற்றும் வெளிவாரி மற்றும் நீடிப்பு

நிகழ்ச்சிகளை கவனிப்பதற்காக நிகழ்ச்சிகளை வழங்காத மூன்று திணைக்களத் தலைவர்கள் அவற்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்று திணைக்களங்களும் முறையே,

1. கணினி மற்றும் புத்திக்கூர்மை முறமைகள் (CIS)
2. தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பங்கள் (CMT)
3. தகவல் முறைமை எந்திரவியல் (ஐஎஸ்ஈ) என்பவையகும். (ISE)

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) மத்திய நிலையங்கள்**

கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) பல இடைநிலை செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அச் செயற்பாடுகள் ஆறு தனித்தனி மத்திய நிலையங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒருங்கிணைப்பாளாகள் ஒருவர் இருப்பதுடன், அவர் நாளாந்த தொழிற்பாடுகளை முகாமை செய்வார். ஆறு நிலையங்களும் பின்வருமாறு-

1. உயர்தர டிஜிடெல் பல்லூடக நலையம் (ADMTC);
2. கணினியியல் சேவைகள் நிலையம் (CSC);
3. வெளிவாரி பட்டங்கள் நிலையம் (EDC);
4. ஈ-லேனிங் நிலையம் (eLC);
5. தொழிற்றுறை அபிவிருத்தி நிலையம் (PDC);
6. டிஜிடெல் பொரன்சிஸ் நிலையம் (CDF).

ஆட்சி

---

கூட்டாட்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) செயற்பாடுகளின் பிரதான பகுதிகளாக கல்வி, ஆய்வு, ஆலோசனை மற்றும் சமூகப்பொறுப்பு என்பனவாகும். இவற்றுள் கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகத்தை (UCSC) ஏனைய ICT கல்வித் துறையிலிருந்து வேறுபடுத்துவதும் ஏனைய மூன்று தூண்களுக்கு ஆதரவளிப்பதுமான பிரதான தூணாக ஆய்வு இனங்காணப்பட்டுள்ளது. இந்தத் தூண்கள் பிரதான இரு மூலங்களினால் ஆதரவளிக்கப்படுகின்றன. அவை, மனித மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு/வளங்கள் மற்றும் நிருவாக/நிதிச் சேவைகள் ஆகும். அதற்கும் மேலாக இந்த எல்லாத் துறைகளின் நல்லாட்சிக் ‘கூரை’ மூலம் எதிர்பார்ப்புக்கள் ஒன்றாக சேர்க்கப்பட்டு கண்காணிப்புச் செய்யப்படுகிறது.

**முகாமைத்துவம்**

கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) முகாமைத்துவமானது திணைக்களத் தலைவர்களினதும் மத்திய நிலைய ஒருங்கிணைப்பாளர்களினதும் ஒத்துழைப்புடன் UCSC இன் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. UCSC இன் சட்டவாக்க மற்றும் தெரிவுக் குழுக் கூட்டங்கள் பணிப்பாளரினால் தலைமை தாங்கப்படும்.

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) அலுவலர்கள்**

**பணிப்பாளர்**: பேராசியர் ஜீ.என். விக்கிரமநாயக்க
**பிரதிப் பணிப்பாளர்**: பேராசிரியர் என்.டீ. கொடிக்கார

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) திணைக்களத் தலைவர்கள்**
CIS: திரு. ஜீ.பீ. செனவிரத்ன; CMT: திரு. ஜீ.கே.ஏ. டயஸ்; ISE: கலாநிதி டீ.டீ. கருணாரத்ன

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) மத்திய நிலைய ஒருங்கிணைப்பாளர்கள்**
ADMTC: திரு. எஸ்.ரீ. நந்தசார; CSC: திரு. எல்.பீ. ஜயசிங்ஹ; EDC: திருமதி எஸ்.பீ. ஆரியரத்ன; eLC: கலாநிதி கே.பீ. ஹேவாகமகே; PDC: கலாநிதி எஸ்.எம்.கே.டீ. அருணதிலக்க; CDF: திரு. கே.எஸ். குணதிலக்க.

**அதிகாரங்கள்**

கற்கை நிறுவகத்தில் அதிகாரமளிப்பவர்கள் முகாமைத்துவ சபை; கல்வி பிரதிகள் குழு; கற்கைகள் சபை; கற்கை மற்றும் மத்திய நிலைய திணைக்களம்.

**முகாமைத்துவ சபை**

முகாமைத்துவ சபையின் மாதாந்தக் கூட்டங்கள் 12 மற்றும் விசேட கூட்டங்கள் 03 இவ்வாண்டில் நடத்தப்பட்டன. முகாமைத்துவ சபையின் உள்ளடக்கமானது கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர் (தலைவர்); பிரதிப் பணிப்பாளர்; திணைக்களத் தலைவர்கள் (CIS/CMT/ISE); **நியமனம் பெற்றவர்/செயலாளர், உயர் கல்வி அமைச்சு**: திரு. பியசேன ரனேபுர; நியமனம் பெற்றவர்/நிதி அமைச்சு: திரு. ஆர். உடுவாவல; **பீடாதிபதி, விஞ்ஞான பீடம்**: பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன; **கொ.பல்.கழக (UOC) சபையின் நியமனம் பெற்றவர்கள்**: திரு. சீ. மாலியத்த; திரு. அசோகா பதிரகே (மார்ச் வரை), திரு. எச்.எம்.என். வரகஉல்லே (ஏப்பிரல் முதல்); **கொ.பல்.கழக (UOC) செனட் சபை நியமனம் பெற்றவர்கள்**: பேராசிரியர் கே.எஸ். தென்னகோன்; பேராசிரியர் பீ.எஸ்.எம். குணரத்ன; **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) நியமனம் பெற்றவர்கள்**: திரு. எஸ். முதலிகே; தேசமானிய திரு. எம்.டீ.டீ. பீரிஸ்; **தகவல் தொழில்நுட்பத் (IT) துறை பிரதிநிதிகள்**: திரு. ஜயந்த டி சில்வா (மே வரை), திரு. டீ.பி. சபரமாது (ஒக்ரோபர் முதல்); திரு. மனோசேகரம்; **UCSC இன் கல்வி பிரதிநிதிகள் குழு நியமனம் பெற்றவர்கள்**: கலாநிதி டீ.என். ரணசிங்ஹ, கலாநிதி ஜீ.டீ.எஸ்.பீ. விமலரத்ன, கலாநிதி எம்.சீ. ஜயவர்தன; முன்னாள் பணிப்பாளர் (அழைக்கப்பட்டவர்): கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ.

முகாமைத்துவ சபைக்கு இரு உப குழுக்களான நிதி மற்றும் முகாமை குழு, கணக்காய்வுக் குழு என்பன உதவுகின்றன. வருடத்தினுள் இரு குழுக்களினதும் முறையே 02 மற்றும் 04 கூட்டங்கள் நடைபெற்றன. இரு குழுக்களின் உள்ளடக்கமானது கீழே தரப்பட்டுள்ளன.

**நிதி மற்றும் முகாமை குழு**

பணிப்பாளர் (தலைவர்); பிரதிப் பணிப்பாளர்; திரு. பியசேன ரனேபுர; திரு. ஆர். உடுவாவல; பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன; தேசமானிய திரு. எம்.டீ.டீ. பீரிஸ்.

**கணக்காய்வுக் குழு**

திரு. சுஜீவ முதலிகே (தலைவர், நிதி நிபுணவியலாளர்), பிரதிப் பணிப்பாளர், திரு. சீ. மாலியத்த; திரு. பியசேன ரனேபுர; திரு. ஆர். உடுவாவல.

**கல்வி பிரதிநிதிகள் குழு**

கல்வி பிரதிநிதிகள் குழுவின் 09 கூட்டங்கள் இவ்வாண்டில் நடாத்தப்பட்டன. கல்வி பிரதிநிதிகள் குழுவின் உள்ளடக்கமானது கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்; பிரதிப் பணிப்பாளர்; திணைக்களத் தலைவர்கள் (CIS/CMT/ISE); மத்திய நிலைய ஒருங்கிணைப்பாளர்கள் (ADMTC/CSC/EDC/eLC/PDC); நியமனம் பெற்றவர் (விஞ்ஞான பீடம்): பேராசிரியர் ஆர்.டீ. விஜேசேக்கர; பிரதிநிதிகள்/தகவல் தொழில்நுட்பத்துறை (IT): கலாநிதி ஆர்.ஏ.சீ. ரணசிங்ஹ; சிரேஷ்ட கல்வியாளர்கள் (UCSC); கற்பித்தல் பணியாளர்கள் இருவர்: திரு. எல்.பீ. ஜயசிங்ஹ; திரு. டபிள்யூ.எம்.ஆர். வீரசூரிய.

**கற்கைகள் சபை**

IUD, RHD மற்றும் EEP எனும் பெயரில் மூன்று கற்கை சபைகள் காணப்படுகின்றன. அவை உள்ளக பட்டதாரிப் பட்டங்கள் (IUD), ஆய்வு மற்றும் உயர் பட்டங்கள் (RHD) அத்துடன் வெளிவாரி மற்றும் நீடிப்பு நிகழ்ச்சிகள் (EEP) என்பனவாகும். இச் சபைகள் மூன்றும் இவ்வாண்டில் முறையே 8, 9 மற்றும் 9 கூட்டங்களை நடத்தியுள்ளன.

## கல்வி

**நிகழ்ச்சித்திட்டங்களும் மாணவர்களும்**

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) பல்வேறு மட்டங்களில் விரிவான முறையில் பல வகைப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. அட்டவணை 1 இல் UCSC இனால் நடாத்தப்படும் கற்கைநெறிகளை (நிகழ்ச்சித்திட்டங்களை) மாணவர்கள் மற்றும் ஈடுபட்டுள்ள ஆளணியினருடன் இனங்காட்டுகின்றது.

அட்டவணை 1 - வழங்கப்படும் கற்கைநெறிகள் வகை

| கற்கைநெறி | மொத்த மாணவர்கள் | மொத்தக் கல்விசார் ஆளணியினர் | மொத்தக் கல்விசாரா ஆளணியினர் |
|---|---|---|---|
| பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகள் | 1,125 | 48 | 62 |
| ஆய்வு மற்றும் ஏனைய கருத்திட்டங்கள் | 42 | 16 | 10 |
| விரிவாக்கல் கற்கைநெறிகள் | 528 | 07 | 55 |
| வெளிவாரிப் பட்டப்படிப்பு | 5,700 | 41 | 11 |
| இணையம் மூலம் | 699 | 3 | 8 |
| ஏனையவை - விஞ்ஞான பீடம் | 1,267 | 19 | 2 |

**பட்டப் படிப்புகள்**

பட்டதாரிகளுக்கான கணினிக் கல்வியானது முதன்முறையாக 1967 இல் விஞ்ஞான பீடத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) இச் சந்தர்ப்பத்தை 1267 விஞ்ஞான பீட மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. 1990 இல் கணினியியல் ஒரு பட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. எல்லாமாக 2005 மாணவர்கள் UCSC இனால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். கொழு. பல்கலை. கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) தற்போது 487 மாணவர்களுக்கு கணினி விஞ்ஞானத்தையும் (CS), 251 மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பட்டத்தினையும் (ICT) வழங்கி வருகின்றது.

**உள்வாரிப் பட்டங்கள்**

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) கணினி விஞ்ஞானத்திலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலும் உள்வாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகள் இரண்டை வழங்கி வருகின்றது. இவ்விரண்டு பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளும் தகவல் தொழில்நுட்பத்திலே இரு வேறு சந்தைத் துண்டங்களை இலக்காகக் கொண்டுள்ளதுடன், மூன்று மற்றும் நான்கு வருடத் தெரிவுகளைக் கொண்டுள்ளது. கணினி விஞ்ஞானப் பட்டப்படிப்பு நிகழ்ச்சியானது உயர்தரத்தில் பௌதீக விஞ்ஞானத் துறையில் கற்ற மாணவர்களைத் தெரிவு செய்வதுடன், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பட்டப்படிப்பானது சகல துறை மாணவர்களுக்கும் திறந்ததாகும்.

*கணினி விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டம்* (BCSc) மற்றும் *கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்* (BCSc (CS)) ஆகிய பட்டங்கள் உலகளாவிய ரீதியிலான கணினி விஞ்ஞானத் தொழில் வல்லுநர்களுக்கான தேவையை நிறைவுசெய்வதற்காக வடிமைக்கப்பட்டுள்ளது. கணினி

விஞ்ஞான இளமாணிப் பட்டம் (BSc) மூன்று வருட காலத்தை கொண்டதாகவும் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் (BSc(CS) நான்கு வருட காலத்தைக் கொண்டதாகவும் காணப்படுகிறது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சிகளானவை புதியதொரு வகை தகவல் தொழில்நுட்ப (IS) தொழில்வல்லுநர்களை வியாபாரத் தேவைகளுக்கும் தொழில்நுட்பத் தீர்வுகளுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்காக வடிமைக்கப்பட்டுள்ளன. இந்த பட்டப்படிப்பு நிகழ்ச்சியானது புதிய வகை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) வல்லுநர்களை உருவாக்குவதற்காக வடிமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின் பாடத்திட்டமானது தொடர்பாடல் மற்றும் குழுவேலை போன்ற மென்திறன்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இந்த மூன்று வருட காலப் பட்டமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் இளமாணி (BICT) எனவும், நான்கு வருட காலப் பட்டமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி (BSc (ICT)) எனவும் அழைக்கப்படும்.

பட்டப் படிப்பினை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்வதற்கு எமது பட்டப் படிப்பு நிகழ்ச்சிகளை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ACM/IEEE வழிகாட்டல்களுக்கு அமைவானதாக்க வேண்டும். இந்தச் செய்முறையை தீர்மானிப்பதற்காக பாடத்திட்ட வடிவமைப்பு தொடர்பான பல செயலமர்வுகளை நடாத்தியுள்ளோம். இந்தச் செய்முறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் (ICT) பட்ட நிகழ்ச்சியானது தகவல் முறைமையுடன் ACM/IEEE துறைக்கமைவாகச் செல்ல வேண்டுமென அடையாளம் காணப்பட்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் (ICT) பட்டத்திலிருந்து தகவல் முறைமை பட்டத்திற்கு மாற்றம் செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதிகமான மாணவர்கள் மென்பொருள் இயந்திரவியலாளர்களாக மாறுவதால் ஒரு மென்பொருள் இயந்திரவியல் பாடநெறியை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். கணினி விஞ்ஞானத்தில் பல்கலைக்கழக அனுமதி பெறுபவர்களுக்கு மென்பொருள் இயந்திரவியல் துறையொன்றை அமுல்படுத்துவதற்காக பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தற்போது UCSC ஆனது கணினி விஞ்ஞானம், மென்பொருள் இயந்திரவியல், தகவல் முறைமைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் எனும் நான்கு கணினிப் பட்டங்களை வழங்குகின்றது. அவற்றினுள் மென்பொருள் இயந்திரவியல் மற்றும் தகவல் முறைமைகள் 2012/2013 இலிருந்து பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவர்களுக்கான புதிய பட்டப் படிப்பு நிகழ்ச்சிகளாகும்.

கணினி விஞ்ஞான (CS) பட்டமானது தற்போதுள்ள 3 வருட மற்றும் 3+1 (4 வருட) நிகழ்ச்சிக்குப் பதிலாக 2+1 (3 வருட) மற்றும் 2+2 (4 வருட) பட்டங்களாக மீள்வடிமைக்கப்பட்டுள்ளன. புதிய நிகழ்ச்சியில் தற்போதுள்ள 3 மற்றும் 4 வருட கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சிக்கு மேலதிகமாக 4 வருட மென்பொருள் இயந்திரவியல் (SE) கற்கைத் துறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2012/13 மாணவர் அனுமதியுடன் இம் மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
பாடத்திட்ட மீள்வடிமைப்பின் பெறுபேறாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) எனும் பெயர், தகவல் முறைமை (IS) என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்

அங்கீகாரத்துடன் மாற்றம் பெற்றுள்ளது. புதிய 3 வருட பட்டம் தகவல் முறைமை இளமாணி (BIS) என்றும் 4 வருட பட்டம் தகவல் முறைமை இயந்திரவியல் விஞ்ஞான இளமாணி (BSc (ISE)) என்றும் அழைக்கப்படும். புதிய பாடத்திட்ட அமுலாக்கல் 2012/13 ஆண்டு மாணவர் அனுமதியுடன் செயற்படுத்தப்படும்.

**அனுமதிக்காக உள்வாங்குதல்**

2010 க.பொ.த. (உ/த) சம்பந்தமான பிரச்சினையும் அதனால் மாணவர் அனுமதிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2013 ஆண்டுக்கு ஒத்திப்போடப்பட்டமை காரணமாக, கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தினால் (UCSC) புதிய தொகுதி மாணவர் அனுமதியினை மேற்கொள்ள முடியாமல் போனது. ஆண்டினுள் UCSC இல் மொத்தமாக 738 மாணவர்கள் பதிவினை மேற்கொண்டனர். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சிக்கான நுண்ணறிவுப் பரீட்சையானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கொள்கை காரணமாக UCSC இன் எதிர்ப்பின் மத்தியிலும் நீக்கப்பட்டது. அடுத்த அனுமதிகளின் போது இதனை மீள அறிமுகப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புதிய க.பொ.த. (உ/த) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தை, UCSC இன் ICT நிகழ்ச்சி அனுமதிக்கான பாடநெறியாக கொள்வதற்கான சாத்தியக்கூறு பற்றியும் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

அட்டவணை 2 - உள்வாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகள்

| பாடநெறி | 2012 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானமாணி | - | 160 | 147 | 140 | 0 | 447 | 104 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி | 40 | 0 | 0 | 0 | 40 | 40 | 39 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி | - | 78 | 77 | 76 | 0 | 231 | 59 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி | 20 | 0 | 0 | 0 | 20 | 20 | 18 |
| UCSC இன் பட்டதாரி மாணவர்கள் | **60** | **238** | **224** | **216** | **60** | **738** | **220** |
| விஞ்ஞானமாணி, விஞ்ஞானப் பீடம் | - | 539 | 418 | 280 | 30 | 1267 | - |
| உள்வாரிப் பட்டதாரி மாணவர்கள் | **60** | **777** | **642** | **496** | **90** | **2005** | **220** |

எல்லாப் பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலத்திலே நடைபெறும்.

**வருகைதரும் ஆளணியினர்.**

எல்லா கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவு பணியாளர்களும் உள்வாரிப் பட்டப் படிப்பை வழங்குவதில் பங்களிப்புச் செய்துள்ளனர். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பட்ட நிகழ்ச்சியில் வெளியக வளங்களை வேண்டி நிற்கும் பாடநெறிகள் பல உள்ளடங்கியுள்ளன. 13 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு வருகைதரும் விரிவுரையாளர்களாக 17 பேரை அழைத்துள்ளது.

**தொழிற்றுறையில் அமர்த்துதல்**

தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனமானது (PDC), தகவல் தொழில்நுட்ப தொழிற்றுறையுடன் நெருங்கிய உறவு மற்றும் பட்டதாரிகளின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக கல்வி நிகழ்ச்சிகளின் முன்னேற்றத்தை தொழிற்றுறை தொடர்பின் ஊடாக தொடர்ச்சியாக பேணிச்செல்லப்பட்டது. இவ்வாண்டில் PDC ஆனது 214 பட்டதாரிகளை 61 நிறுவனங்களில் 6 மாதப் பயிற்சிக்காக அமர்த்தியுள்ளது

**மாணவர்களின் செயற்பாடுகள்**

மூன்றாம் ஆண்டில் வெளியேறிச் செல்லும் மாணவர்கள் அவர்களது பிரியாவிடை வைபவத்தையும் கனிஷ்ட மாணவர்கள் மாணவர் விளையாட்டுத் தினத்தையும் ஒழுங்குசெய்து நடத்தினர். மாணவர்கள் சிங்கள புத்தாண்டு விழாவையும் பொசன் பக்தி கீத நிகழ்ச்சியினையும் நடத்தினர். மாணவர் புகுமுக வரவேற்பு மற்றும் வாணி விழா நிகழ்வுகள் என்பன நடைபெற்றன. எனினும், மூன்று மாத கல்விசார் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் காரணமாக திட்டமிட்டிருந்த ஏனைய பல்வேறு நிகழ்வுகள் இரத்துச்செய்யப்பட்டன. மாணவர்களுக்காக IEEE மற்றும் Google அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகள் UCSC இல் நடைபெற்றன. துருபல் லங்கா (Drupal Lanka) நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட துருபல் செயலமர்வில் மாணவர்கள் பங்குபற்றினர்.

**மாணவர்களின் அடைவுகள்**

UCSC ஆனது மாணவர்களையும் ஆளணியினரையும் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஊக்குவிப்பதைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. கடந்த சில வருடங்களில் UCSC ஆனது NBQSA, e-Swabhimani, APICTA மற்றும் மந்தன் (Manthan) போன்றவற்றினால் வழங்கப்பட்ட பல திறந்த விருதுகளை வென்றுள்ளது. மாணவர்கள் இமேஜின் கிண்ணம் (Imagine cup) மற்றும் ஏனைய நிகழ்வுகளில் சிறந்து விளங்குகின்றனர்.

IEEEXtreme போட்டியானது ஒரு உலகலாவிய சவாலாக இருப்பதுடன், IEEE மாணவர் அங்கத்தவர் அணிகள் ஒருவருக்கொருவர் எதிராக 24 மணிநேர காலப்பகுதியொன்றில் கணினி நிகழ்ச்சித்திட்டப் பிரச்சினைக் கோவையொன்றைத் தீர்ப்பதற்கான போட்டியில் ஈடுபடவேண்டியுள்ளது. 2011 இல் UCSC இலிருந்து 13 அணிகள் பங்குபற்றியதன் மூலம் முதன்முதலாக இந் நிகழ்வில் UCSC

மாணவர்கள் கலந்துகொண்டதுடன், UCSC இல் இருந்து பங்குபற்றும் அணிகளின் எண்ணிக்கையானது 2012 இல் 35 அணிகளில் 105 மாணவர்கள் என்பதாக அதிகரிக்கப்பட்டது. அத்துடன், UCSC இன் மிகச் சிறந்த அணியானது உலகின் 207 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது.

கூகுல் சமர் கோட் (Google Summer of Code) நிகழ்வானது 18 வயதும் அதற்குக் குறைவான இரண்டாம் நிலை மாணவர்களின் அபிவிருத்திக்கான உலகலாவிய திட்டமொன்றினை வழங்குகிறது. பலவிதமான திறந்த வள மென்பொருள் கருத்திட்டங்களுக்கான நெறிகளை இதில் வரைதல் வேண்டும். முதற்தடவையாக 2011 இல் UCSC இன் பங்குபற்றல் இடம்பெற்றது. இது 2012 இலும் தொடர்ந்ததுடன், ஒரு மாணவர் நிகழ்ச்சித்திட்டதை வெற்றிகரமாக பூர்த்திசெய்தார்.

வேர்ல்ட் சம்மிட் அவார்ட் (World Summit Award (WSA)) ஆனது உலகின் மிகச் சிறந்த e-Content மற்றும் சிறந்த புத்தாக்க ICT பிரயோகங்களை தெரிவுசெய்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பான உலகலாவிய செயற்பாடாகும். 2010 இல் இருந்து UCSC மாணவர்கள் இதில் பங்குபற்றி வருகின்றனர். 2012 இன் WSA-mobile வெற்றியாளர்களுக்கான நிகழ்வில் e-Media & News பிரிவின் கீழ் "TrafficMate" படைப்பு 2012 இல் வெற்றியீட்டியது.

பிரித்தானிய கணினிச் சங்கத்தின் (BCS) தகவல் தொழில்நுட்ப (IT) பட்டய நிறுவகத்தின் இலங்கைப் பிரிவினால் ஒழுங்குசெய்யப்படும் மூன்றாம் நிலை கற்கை மாணவர்களுக்கான தேசிய சிறந்த தர IT விருது (NBQSA) 2003 இல் இருந்து வருடாந்தம் நடைபெற்றுவருகிறது. 2012 இல் "TrafficMate" கருத்திட்டத்திற்காக வெள்ளிப் பதக்கத்தை தினுனி பெர்னாந்து, சந்திம பெர்னாந்து, சி. பங்கஜன், சஹான் உதான, திலினி அசங்க, சமிதா உதல்கம, லுமினி சஹபந்து மற்றும் லசந்த சமரகோன் ஆகியோர்கள் வென்றனர். அத்துடன், "OWPS - Open Wave Propagation Simulator" கருத்திட்டத்திற்காக விசேட சிறப்பு விருதினை ஆர்.எம். ஜிஹான் பி. விஜேரத்ன வென்றுள்ளார்.

பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க நினைவுக் கேடய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான புள்ளிவிபரவியல் வினா போட்டியில் UCSC இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு கணினி விஞ்ஞான மாணவர்கள் ஐந்து பேர் கொண்ட குழு கேடயத்தை வென்றது.

கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கை நிறுவக (UCSC), 3 ஆம் ஆண்டின் கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சியின் மூன்று பட்டதாரி மாணவர்களான பங்கஜன் சந்திரசேகரன், தினுனி பெர்னாந்து மற்றும் சஞ்ஜய அமரசிங்ஹ ஆகியோர்களைக் கொண்ட அணியானது Calcey Technologies நிறுவனத்தினால் ஒழுங்குசெய்து நடத்தப்பட்ட Hackathon போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. ஒவ்வொருவரும் அவர்களின் மென்பொருள் அபிவிருத்தித் திறன்களை நிரூபிப்பதற்காக ஆறு பல்கலைக்கழகங்களில் இருந்து (Moratuwa - CSE & IT, UCSC, APIIT, SLIIT,

Kelaniya MIT) மாணவர் அணிகள் போட்டியிட்டன.

கவிதா ஆற்றல் (Kavitha Talent Show) நிகழ்வானது உயர் கல்வி அமைச்சினால் பல்வேறு பிரிவுகளின் கீழ் ஒழுங்குசெய்யப்பட்டது. ஆண்டிற்கான இலத்திரணியல் ஊடக – ஆக்கபூர்வமான தொலைக்காட்சி ஒளிபரப்பாளர் (Electronic Media - Creative Television Broadcaster) எனும் பிரிவில் UCSC மாணவர் இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டார்.

**விளையாட்டுக்கள்**

UCSC இன் சீ.கே. வடுகே என்பவர் கொழும்புப் பல்கலைக்கழக மகளிர் ஹொக்கி குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

**பட்டமளிப்பு**

பட்டப் படிப்பு நிகழ்ச்சிகள் நான்கையும் சேர்ந்த 220 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்கான மாணவர்கள் உயர் தரத்தில் ஏதேனும் துறையிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள். இந்த மாணவர்களினது அடைவுகள் துறை ரீதியாகக் அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 3 - UCSC உள்வாரிப் பட்டதாரிகளின் செயலாற்றல்

| அனுமதி | முதலாம் | மேல் | கீழ் | சித்தி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| BCSc | 1 | 2 | 9 | 92 | **104** |
| BICT | 0 | 4 | 10 | 45 | **59** |
| BSc CS | 11 | 18 | 10 | 0 | **39** |
| BSc ICT | 6 | 6 | 6 | 0 | **18** |
| மொத்தம் | 18 | 30 | 47 | 137 | 220 |

பட்டதாரிகளின் தொழில்பெறும் இயலுமை தரவுகளும் சேகரிக்கப்பட்டு, HETC கருத்திட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதுபற்றிய பகுப்பாய்வு அறிக்கையில் உள்ளடக்குவதற்காக இன்னும் கிடைக்கவில்லை.

விருதுகள்

வீ.பி. விஜேசூரிய என்பவருக்கு UCSC இன் மிகச் சிறந்த சாதனையாளர் பட்டதாரிக்கான பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க பதக்கம் வழங்கப்பட்டது. கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சியில் மூன்று விருதுகளான கணினி கற்கைகளுக்கான மொஹான் முனசிங்ஹ விருது, தொழிற்றுறைப் பயிற்சியில் சிறந்த செயலாற்றுக்கான டேவிட் பீரிஸ் குழுமத்தின் தங்கப்பதக்கம் மற்றும் Virtusa Academic Excellence விருது என்பன முறையே வை.பீ. குணவர்தன, எம்.வீ. மத்துகம மற்றும் எம்.எஸ். ருவன்ஹேவா ஆகியோருக்கு வழங்கப்பட்டன. அத்துடன், சிறந்த கணினி விஞ்ஞான இறுதியாண்டு கருத்திட்டத்திற்கான CINTEC விருது ரீ.ஏ.எம்.சீ. தந்திரவத்த மற்றும் என். வணிகசேக்கர ஆகியோருக்கு வழங்கப்பட்டன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சியில் நான்கு வருட பட்டத்தில் சிறந்த செயலாற்றுக்கான IFS Academic Excellence விருது மற்றும் 3 ஆம் ஆண்டு பட்ட நிகழ்ச்சியில் சிறந்த இறுதியாண்டு கருத்திட்ட சம்பத் வங்கி விருது, சிறந்த தொழிற்றுறை பயிற்சி டேவிட் பீரீஸ் குழுமத்தின் தங்கப்பதக்கம் மற்றும் சிறந்த செயலாற்றல் Motorola Academic Excellence விருது என்பன முறையே எஸ்.ஆர்.பி. ராஜபக்ஷ, கே.கே.ஜீ. வீரசேக்கர, எச்.பீ.டீ. ஜயதிலக்க மற்றும் டபிள்யூ.கே.ஏ. தர்ஷனி ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டன.

எம்மால் உருவாக்கப்படும் மாணவர்களின் தரத்தில் அது செல்வாக்குச் செலுத்தும் என்பதால் சிறந்த மாணவர்களைக் கவருவதே எமது முதன்மையான அக்கறையாகும். பட்டதாரி நிகழ்ச்சிகளுக்காக பதிவு செய்யும் மாணவர்களை தெரிவு செய்தலானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் மத்தியஸ்தமாக செயற்படுத்தப்படுகிறது. அது மாணவர்களின் விருப்பத் தெரிவின் அடிப்படையிலாகும். தற்போது அதிகமான மாணவர்களின் முதல் தெரிவு இயந்திரவியல் அல்லது மருத்துவம் ஆகும். அத்துடன், அதிகமான மாணவர்கள் UCSC பட்ட நிகழ்ச்சிகள் பற்றியும் கணினித் துறையிலுள்ள தொழில் வாய்ப்புக்கள் பற்றியும் அறியாதவர்களாக உள்ளனர். அதற்காக, UCSC ஆனது வருகை தர எதிர்பார்த்துள்ள அனுமதி பெறும் புதுமுக மாணவர்களுக்கு இருநாள் செயலமர்வுகளை நடத்திய போது மாணவர்களின் வருகை சிறப்பாக இருந்ததுடன், தொடர்ந்தும் ஒழுங்குசெய்யவுள்ளது. இதுவரை உள்வாரி நிகழ்ச்சிக்காக பதிவுசெய்யும் வாய்ப்பு அதற்கான ஆர்வம் காட்டுபவர்களுக்கு கிட்டவில்லை.

பட்டப் பின்படிப்பு கல்வி

பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகள் முதன்முறையாக 1986 இல் பட்டப் பின்படிப்பு திப்ளோமாவாக நிகழ்ச்சியாக வழங்கப்பட்டது. UCSC ஆனது தற்போது மூன்று முதுமாணிப் பட்ட நிகழ்ச்சிகளையும் ஆய்வுப் பட்டப் நிகழ்ச்சிகளையும் 523 மாணவர்களுக்கு வழங்குகின்றது (அட்டணை 4). 1990 ஆம் ஆண்டிலிருந்து 190 மாணவர்களுக்கு கணினி விஞ்ஞான முதுமாணிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சியானது 2000 ஆம் ஆண்டிலிருந்து 178 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. 2011 ஆண்டிலிருந்து தகவல் பாதுகாப்பு நிகழ்ச்சி 51 மாணவர்களுக்கு வழங்குகிறது. IBMBB உடன் இணைந்து நடத்தப்படும் புதிய உயிரியல் தகவல் முறைமை

நிகழ்ச்சியும் 12 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 42 மாணவர்கள் தத்துவமாணி/கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அட்டவணை 4 – பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகள்

| பாடநெறி | 2012 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞான முதுமாணி | 68 | 60 | 80 | 31 | 19 | 190 | 48 |
| தகவல் தொடர்பாடல் முதுமாணி | 66 | 57 | 72 | 29 | 20 | 178 | 58 |
| தகவல் காப்பு முதுமாணி | 26 | 26 | 25 | - | - | 51 | - |
| உயர் கணினியியல் முதுமாணி | - | - | - | - | 12 | 12 | 07 |
| உயர் கணினியியல் கலாநிதி | - | - | - | - | - | - | 05 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி | - | - | - | - | 20 | 20 | 04 |
| கணினி விஞ்ஞான கலாநிதி | - | - | - | - | - | - | 16 |
| தகவல் தொழில்நுட்பவியல் விஞ்ஞான முதுமாணி | - | - | - | - | 18 | 18 | 05 |
| தகவல் தொழில்நுட்பவியல் கலாநிதி | - | - | - | - | - | - | 13 |
| Bioinformatics விஞ்ஞான முதுமாணி | 12 | 12 | - | - | - | 12 | - |
| Taught கலாநிதி | **172** | **155** | **177** | **60** | **89** | **481** | **156** |
| தத்துவமாணி | 10 | 10 | 13 | 05 | 14 | 42 | 03 |
| **மொத்தம்** | **182** | **165** | **190** | **65** | **103** | **523** | **159** |

எல்லாப் பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலமே நடைபெறும்.

**முதுமாணிப் பாடநெறிகள்**

எல்லாப் பாடநெறிகளும் வேறுபட்ட மக்கள் கூட்டத்தினருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் முதுமாணிப் (MIT) பாடநெறியானது கணினியியல் அல்லாத ஆனால் அவர்களது தொழிற்றுறையை தகவல் தொழில்நுட்பவியல் (IT) துறையில் மேற்கொள்ள விரும்பும் மாணவர்களை இலக்காகக் கொண்டுள்ளது. முகமைத்துவம், வலைப்பின்னல் அல்லது பல்லூடகத் தொழில்நுட்பம் போன்ற பல துறைகளுடன் தகவல் தொழில்நுட்பவியலிலும் விசேட திறன்பெற விரும்புபவர்களுக்கும் இது பொருத்தமானதாகும்.

கணினி விஞ்ஞான முதுமாணி (MCS) நிகழ்ச்சியானது கணினி விஞ்ஞான அல்லது தகவல் தொழில்நுட்பவியல் (CS/IT) தொழில்சார்ந்த ஏற்கனவே கணினியியல் பட்டமொன்றைக் கொண்டுள்ளவர்களுக்கும் ஆய்வுடன் கூடிய CS/IT பட்டப் பின்படிப்புத் தகைமையைப் பெற விரும்புவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தகவல் காப்பு விஞ்ஞானத்தில் முதுமாணி (MScIS) நிகழ்ச்சியாது தகவல் காப்புத் துறையில் பட்டப் பின்படிப்புத் தகைமையைப் பெற விரும்பும் மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல், தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் தகவல் காப்பு எனும் துறைகளில் வேலை செய்வோருக்கு இடைத் தொழில் வாய்ப்புக்களை இந்த நிகழ்ச்சி வழங்குகின்றது.

புதிய இரு வருட தகவல் காப்பு முதுமாணிப் பட்டத்தின் முதலாம் வருடத்தை 25 மாணவர்கள் பூர்த்திசெய்துள்ளனர். கணினி விஞ்ஞானத்திலும் தகவல் தொழில்நுட்பத்திலும் நடைபெற்று வரும் இரண்டு முதுமாணி நிகழ்ச்சிகளில் 150 மாணவர்கள் இணைந்துள்ளனர். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் IBMBB உடன் இணைந்து உயிரியல் தகவல் தொழில்நுட்பவியலில் புதிய முதுமாணிப் பட்ட நிகழ்ச்சியொன்று வடிமைக்கப்பட்டுள்ளது.

**விருதுகள்**

கணினி விஞ்ஞான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சியில் சிறந்த மாணவருக்கான Kingslanka விருது (திருமதி) ரீ.எல்.ஓ. ஜயதுங்க மாணவிக்கு வழங்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டத்தில் சிறந்த மாணவருக்கான விருது திரு. ஜீ.ஜீ.கே.பீ. குணரத்ன என்பவருக்கு வழங்கப்பட்டது.

**வெளிவாரிப் பட்டமும் நீடிப்புக் கற்கைநெறிகளும்**


தகவல் தொழில்நுட்ப இளமாணிப் பட்ட வெளிவாரி நிகழ்ச்சிக்கு 5,769 மாணவர்கள் உள்வாங்கப்பட்ட அதேவேளை, 528 பேர் நீடிப்புக் கற்கைநெறிகளைத் தொடருகின்றனர்.

தகவல் தொழில்நுட்ப பட்ட (BIT) நிகழ்ச்சி மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 27,148 பேரைக் கவர்ந்துள்ளது. 2012 இல் 2031 புதிய மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்குபற்றினர் (அட்டவணை - 5). 2012 க.பொ.த (உ/த) பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்பட்ட தாதம் காரணமாக குறைவடைந்தது. தகவல் தொழில்நுட்ப பட்டதாரி மாணவர்களுக்கு அமைச்சின் NODES நிலைய கணினி வளங்களை மிகச் சாதாரண கட்டணங்களுக்குப் பயன்படுத்த இவ்வருடமும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5 - வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சிகள்

| பாடநெறி | 2012 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா | 2031 | 2811 | 1044 | 314 | 4169 | 654 |
| தகவல் தொழில்நுட்பவியல் உயர் டிப்ளோமா | 715 | 1358 | 501 | 531 | 2390 | 262 |
| தகவல் தொழில்நுட்பவியல் இளமாணிப் பட்டம் | 312 | 314 | 531 | 568 | 1413 | 172 |
| **எல்லாம்** | | **2811** | **1545** | **1413** | **5769** | |

அட்டவணை – 6 ஐந்து வருட காலமாக இலக்குகளுடன் பதிவுசெய்து கொண்ட மற்றும் பட்டம் பெற்ற தகவல் தொழில்நுட்பவியல் பட்டதாரி மாணவர்களது செயலாற்றலைக் கட்டுகின்றது.




அட்டவணை 6: கடந்த ஐந்து வருட காலத்தினுள் வெளிவாரிப் பட்டசெயலாற்றல்

| வெளிவாரிப் பட்டதாரி மாணவர்கள் | KPI | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| DIT – புதிய அனுமதிகள் | **2000** | 1540 | 2052 | 2514 | 2365 | 2031 |
| DIT – மீள எடுப்பவர்கள் | - | 1236 | 1438 | 1767 | 1922 | 2138 |
| DIT – டிப்ளோமாக்கள் | **600** | 607 | 429 | 361 | 576 | 654 |
| HDIT - உயர் டிப்ளோமா அனுமதி | **600** | 588 | 537 | 549 | 648 | 715 |
| HDIT - உயர் டிப்ளோமா பதிவுசெய்யப்பட்டது | **2000** | 1700 | 1749 | 1863 | 2019 | 2390 |
| HDIT - உயர் டிப்ளோமாக்கள் | **300** | 386 | 310 | 199 | 309 | 262 |
| BIT – பட்டதாரி அனுமதி | **300** | 236 | 258 | 228 | 279 | 312 |
| BIT - பட்டதாரி பதிவுசெய்யப்பட்டது | **1200** | 1102 | 1126 | 1188 | 1293 | 1413 |
| BIT – பட்டதாரிகள் | **150** | 138 | 161 | 140 | 129 | 172 |

உள்வாங்கல்களில் மீளவும் கற்போர் உள்ளடக்கப்படவில்லை.

குறிப்பு: 2008 (HDIT), 2009 (BIT) என்பவற்றில் GPA அடிப்படையிலான மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தல் eBIT கருத்திட்டத்தின் கீழ் பிரதான பாடத்திட்ட சீர்திருத்தமொன்று செய்யப்பட்டது. சகல கட்டாய பாடநெறிகளிலும் சித்தியடைதல் தேவைப்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டதனால் 2009 ஆண்டு பட்டதாரிகள் நன்மையடைந்தனர். பட்டத் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு பாடநெறியிலும் குறைந்தபட்சம் D தரம் இருத்தல் வேண்டுமென்பது 2011 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

## பட்டமளிப்பு

2012 ஏப்பிரல் 4 ஆம் திகதி நடைபெற்ற 2011 ஆம் ஆண்டின் பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றியவர்களது செயற்சாதனைகள் அட்டவணை 7 இல் காட்டப்பட்டுள்ளன. 129 பட்டதாரிகள் இப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெற்றனர். 98 (87 %) பேர் ஏற்கனவே தொழில் புரிவதுடன், எஞ்சியோரில் 15 (13 %) பேர் வேலையற்றுயிருப்பதுடன், 6 (5 %) மாத்திரமே வேலையை எதிர்பார்த்து நிற்கின்றனர். 16 (29 %) மாணவர்கள் தொழில்பெறும் இயலுமை பற்றிய விளக்கங்களுக்கு பதிலளிக்கவில்லை.

அட்டவணை 7: 2012 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்றோர்

| அனுமதி | முதலாவது | உயர் | கீழ் | சித்தி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| BIT | 3 | 5 | 8 | 113 | **129** |

## விருதுகள்

தகவல் தொழில்நுட்ப இளமாணி (வெளிவாரி) பட்டத்தில் சிறந்த செயலாற்றலுக்கான விருது பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க பதக்கம் எஸ்.பீ. பிரேமரத்ன என்பவருக்கு வழங்கப்பட்டது. சிறந்த தனியாள் கருத்திட்டத்திற்கான விருது இஸட்.எம். நௌபல் என்ற மாணவிக்கு வழங்கப்பட்டது. 4 காலாண்டுகளுக்குமான சிறந்த e-Learner விருது எச்.என்.சீ.விஜயவர்தன (I), (II வழங்கப்படவில்லை), கே.ஏ.ரீ. ஜயவர்தன (III) மற்றும் டபிள்யூ.ஏ.எம்.எல்.பி. கருணாரத்ன (IV) ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டன.

## கல்வி நிறுவனங்கள்

அதிகமான பயிற்சி நிறுவனங்கள் BIT அபேட்சகர்ளுக்கு நேருக்குநேர் வகுப்புக்கள் மற்றும் கற்றல் உதவிகளை வழங்குகின்றன. 200 இற்கும் அதிகமான நிறுவனங்கள் இச் செயல்முறைகளில் பங்குபற்றுவதுடன், சில கல்வியாண்டுகளில் 50 நிறுவனங்கள் வரை பங்குகொள்ளும். UCSC அந் நிறுவனங்களிடம் அதிகாரங்களை கையளிக்காவிடினும் நிகழ்ச்சியின் வெற்றிக்கான அவர்களது பங்களிப்பினை ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் UCSC ஆனது ஒவ்வொரு பாடநெறியினதும் நிறுவனங்கள் ரீதியான பரீட்சைப் பெறுபேற்றின் பொழிப்பினை பிரசுரிப்பதனால் அபேட்சகர்களுக்கு வழங்கும் நிறுவனங்களை அடையாளம் கண்டுகொள்ளவும் அவர்களின் கற்கும் முறையை திட்டமிட்டுக் கொள்ளவும் இயலுமாகவுள்ளது. அபேட்சகர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் தாமாகவே VLE மற்றும் வழிகாட்டுதல்/பரிந்துரைக்கப்பட்ட உபகரணங்களின் உதவியுடன் கற்றுக்கொள்ளலை மேற்கொள்கின்றனர். 2011/12 இல் 14 மாவட்டங்களிலிருந்து 33 நிறுவனங்கள் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு பயிற்சியினை வழங்கியுள்ளது. அவற்றினுள் 10 நிறுவனங்கள் மூன்றாண்டு காலமாக இச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. (அட்டவணை 8 இல் * என அடையாளமிடப்பட்டுள்ளது.)

அட்டவணை 8 : தகவல் தொழில்நுட்ப (BIT) பாடநெறியைக் கற்பிக்கும் நிறுவனங்கள்

| மாவட்டம் | நிறுவனம் |
|---|---|
| அம்பாறை | (1) குளோபல் இன்ஸ்ரியுட் ஒப் புறொபெஷனல் ஸ்டடீஸ் |
| பதுளை | (1) கோட் ஜே ஐ ரி சேர்விசஸ் |
| பண்டாரவளை | (1) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| மட்டக்களப்பு | (1) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| கொழும்பு | (1) * எர்த் இன்டர்நெஷனல்<br>(2) எசல் ஜே லங்கா கம்ப்யூடர் பயிற்சி நிறுவகம்<br>(3) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(4) பவுன்டேஷன் ஒப் ஐ ரி புறொபெஷனல்ஸ்<br>(5) *IDM கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(6) * Matrix இன்ஸ்ரியுட் ஒப் ஐ ரி<br>(7) *ஒபன்ஆர்க் ஸ்கூல் ஒப் பிசினஸ் அன்ட் டெக்நொலஜி<br>(8) றொடரி மெனேஜ்மன்ட் சென்டர்<br>(9) *WideAwake சொலுஷன்ஸ் |
| காலி | (1) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| கம்பஹா | (1) * எர்த் இன்டர்நெஷனல்<br>(2) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், கம்பஹா<br>(3) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், நீர்கொழும்பு<br>(4) அர்பன் கொலெஜ் பொர் பிசினஸ் அன்ட் டெக்நொலஜி |
| யாழ்ப்பாணம் | (1) BIT கோனர்<br>(2) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(3) MIS<br>(4) *Mobile@Net கம்ப்யூடர் சேர்விசஸ் |
| கண்டி | (1) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(2) IDM கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(3) இன்பொடெக் இன்டர்நெஷனல் இன்ஸ்ரியுட்<br>(4) Matrix இன்ஸ்ரியுட் ஒப் ஐ ரி<br>(5) நெஷனல் இன்ஸ்ரியுட் ஒப் கோபரேடிவ் டெவலப்மன்ட் |
| கேகாலை | (1) இன்ஸ்ரியுட் ஒப் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| குருணாகல் | (2) * ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| மாத்தறை | (1) Dbase கணினி பாடசாலை<br>(2) * ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| மொனராகலை | (1) குளோபல் இன்ஸ்ரியுட் ஒப் புறொபெஷனல் எடிவுகேசன் |
| இரத்தினபுரி | (1) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |

UCSC ஆனது 500 இற்கும் அதிகமான மாணவர்களைக் கவர்ந்த பத்துக்கும் மேற்பட்ட நீடிப்புச் சான்றிதழ் கற்கைநெறிகளை (Extension Certificate Course) தொடர்ந்து வழங்குகின்றது. அட்டவணை-9a இல் UCSC யினால் நடத்தப்படும் கணினி விஞ்ஞான சான்றிதழ் பாடநெறிகள் (நிகழ்ச்சிகள்) பற்றிய விபரங்களை இனங்காட்டுகிறது.

அட்டவணை 9a: கணினி கற்கைகள் நிறுவன பயிற்சி நிகழ்ச்சிகள்

| பாடநெறி | B | P |
|---|---|---|
| J2EE மூலமான உயர்தர Java பிரயோக அபிவிருத்தி | 3 | 70 |
| உயர்தர பல்லூடக வலைதள வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி நுட்பம் | 3 | 61 |
| AutoCAD 2008 மூலம் கணினி உதவியுடனான வரைதல் | 2 | 68 |
| PHP மற்றும் MySQL மூலம் Dynamic வலைதள அபிவிருத்தி | 3 | 67 |
| உட்பொதிக்கப்பட்ட முறைமை வடிவமைப்பும் அபிவிருத்தியும் | 2 | 23 |
| உட்பொதிக்கப்பட்ட முறைமை செயலமர்வு | 1 | 27 |
| Graphics வடிவமைப்பு மற்றும் படைப்புத்திறன் விருத்தி | 1 | 11 |
| JAVA பிரயோக அபிவிருத்தி | 3 | 76 |
| PHP மற்றும் MySQL | 1 | 12 |
| கருத்திட்ட முகாமைத்துவ செயலமர்வு | 1 | 56 |
| Unix Linux Fundamentals, வலையமைப்பு & முறைமை நிர்வாகம் (C) | 2 | 57 |
| மொத்தம் | **22** | **528** |

**FIT நிகழ்ச்சி**

அடிப்படைத் தகவல் தொழில்நுட்பவியல் (FIT) நிகழ்ச்சியின் குறிக்கோள், பாடசாலையிலிருந்து விலகிச் செல்வோர்களுக்குத் தேவையான அடிப்படைக் கணினிப் பிரயோகத்துடன் சேர்த்து பகுப்பாய்வுச் சிந்தனையையும் தகவல் தொடர்புத் திறனையும் பயன்படுத்துவதன் மூலம் புலமை மற்றும் தேர்ச்சியினை உயர்த்துவதேயாகும். இது 2008 இல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், BIT பட்ட நிகழ்ச்சிக்கு நுழைவதற்கான மாற்றுத் தகைமையாகக் கருதப்படுகிறது. க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று சித்திகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு FIT கோட்பாட்டுக் கூற்றினால் BIT பட்ட நிகழ்ச்சிக்குத் தகைமை பெறலாம். FIT நிகழ்ச்சி செய்முறைக் கூற்றினை உள்ளடக்கி உள்ளதுடன், இவ்வாண்டில்15 பேர் வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ளனர் (அட்டவணை – b).

அட்டவணை 9b : FIT சான்றிதழ் பாடநெறி

| சான்றிதழ் | பதிவு செய்யப்பட்டது | சித்தி | **BIT** இற்கான தகைமையடைதல் |
|---|---|---|---|
| FIT | 618 | 15 | 312 |

**வெளிநாட்டு மாணவர்கள்**

பிராந்தியத்திலே மிகச் சிறந்த மத்திய நிலையமாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக வெளிநாட்டு மாணவர்களைக் கவர்ந்து கொள்வது முக்கியமானதாகும். வெளிநாட்டு மாணவர் பிரிவிலே வேறு எங்கேனும் உயர் தரத்தில் கற்ற மாணவர்களாயினும் உள்ளூருடன் தொடர்புடையவர்களே இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டிலே வெளிநாட்டு மாணவர் பிரிவில் கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சிக்காக முதலாவது மாணவர் அனுமதிக்கப்பட்டதுடன், தற்போது 2 ஆவது ஆண்டில் கற்கிறார். அவர் வெளிநாட்டில் கற்ற இலங்கை மாணவராவார். வெளிநாட்டு மாணவர் அனுமதிகள் பற்றிய தகவல்கள் அட்டவணை 10 இல் தரப்பட்டுள்ளன. 2013 ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கப்படவுள்ள பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிக்காக இரண்டு வெளிநாட்டு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

அட்டவணை 10: வெளிநாட்டு மாணவர்கள்

| பாடநெறி | மொழி | 2011 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானம் | ஆங்கிலம் | 01 | - | 01 | - | - | - |

**ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள்**

HETC நிதி மூலம் அமைச்சினால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன்கள் மற்றும் ஆங்கில மொழி அறிவினை மேம்படுத்துவதற்காக திறனபிவிருத்தி நிகழ்ச்சியொன்று 2011 இல் நடாத்தப்பட்டது. இதனை எல்லாப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் 2012/13 இல் மீண்டும் மதிப்பிடுமாறு UCSC இடம் கேட்டுக்கொள்ளப்பட்டதுடன், இரு பல்கலைக்கழகங்களில் முன் ஆயத்தப்படுத்தல் சோதனையுடன் ஆரம்பிக்கப்பட்டது.

UCSC ஆனது தகவல் தொழில்நுட்பப் பட்ட பாடநெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு இலத்திரனியல் பரீட்சைகளை (e-Testing) நடாத்துவதற்கும் அதேபோன்று பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (ICA) மாணவர்களுக்கும் இதுபோன்ற அமைப்பிலான பரீட்சைகளை நடாத்தியது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறிகள் பற்றிய விபரங்கள் அட்டவணை 11 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 11: புதிய கற்கைநெறிகள்

| பாடநெறி | மொழி | சான்றிதழ் | திப்ளோமா | பட்டப் பின்படிப்பு திப்ளோமா | முதுமாணி | தத்துவமாணி | கலாநிதி |
|---|---|---|---|---|---|---|---|
| இணையம் மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் | ஆங்கிலம் | 2 | - | - | 1 | - | - |

**ஆய்வு, புத்தாக்கங்கள் மற்றும் பிரசுரங்கள்**

பல ஆய்வுக் குழுக்களின் ஊடாக ஆய்வு மாணவர்கள் மூலமாக ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. UCSC ஆனது கணினி விஞ்ஞானம்/ இயந்திரவியல் முதலியவற்றில் சிறந்த முதனிலைப் பட்டப் பெறுபேறுகளைக் கொண்ட மாணவர்களை ஆய்வுக் கருத்திட்டங்களை மையப்படுத்திச் செயற்படுத்தப்படும் அதன் முழு/பகுதி நேர (FT/PT) தத்துவமாணிக் கற்கைகளுக்காக சேர்த்துக்கொள்கின்றது. 10 புதிய மாணவர்கள் மீளாய்வாண்டின் போது பதிவுசெய்யப்பட்டதுடன், ஒரு மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டது. UCSC இன் சிரேஷ்ட கல்வியியலாளர்களின் கீழ் 41 தத்துவமாணி (MPhil) மாணவர்கள் மற்றும் 1 கலாநிதி (PhD) மாணவர் ஆய்வுப் பட்டங்களை தற்போது மேற்கொண்டு வருகின்றனர். 9 தத்துவமாணி (MPhil) மாணவர்கள் மீளாய்வாண்டின் போது பிரசுரங்களை மேற்கொண்டிருந்ததுடன், மூன்று பேர் வெற்றிகரமாக அவர்களது கட்டுரைகளை ஆதரித்துக்கொண்டனர்.

அட்டவணை 12: பட்டப் பின்படிப்பு மாணவர்கள்

| மாணவர்கள் | FT | PT | மொத்தம் | புதிய |
|---|---|---|---|---|
| **மொத்தம்** | 21 | 21 | 42 | 10 |

2009 இல் UCSC ஆனது ஆய்வினை மேம்படுத்துவதற்காக பயன்படுத்துதல் வழிகாட்டியுடன் ஆய்வு நிதியமொன்று உருவாக்கப்பட்டது. ஆரம்ப பங்களிப்பு 4 மில்லியன்களில் இருந்து முதுமாணி மற்றும் தகவல் தொழில்நுட்ப (BIT) பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளால் உருவாக்கப்பட்ட நிதி தொடர்ந்து வளர்ச்சியடைந்து, தற்போது 25.8 மில்லியன்களாக காணப்படுகிறது. சிரேஷ்ட பணியாளர்கள் ஆய்வுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கும் ஆய்வுகளை சர்வதேச மாநாடுகள் மற்றும் சஞ்சிகைகளில் பிரசுரிப்பதற்கும் ஆண்டுதோறும் ரூபா. 250,000 வரை பயன்படுத்த முடியும். UCSC இன் வருடாந்த பிரசுரங்கள் 30 இலிருந்த 60 வரை இதனால் அதிகரித்தது. இவ்வாண்டுகளில் 16 நாடுகளில் நடைபெற்ற 52 மாநாடுகளில் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. 27 (80 %) கல்விசார் பணியாளர்கள் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் 10 சர்வதேச இணை ஆக்க ஆய்வுகள் மற்றும் 8 இணைந்த ஆய்வுப் பிரசுரங்கள் ஆகியவற்றை வெளியிட்டனர். அட்டவணை 13 பிரசுரங்களின் விபரங்களை வழங்குகின்றது.

HETC கருத்திட்டத்தின் கீழ் ஆய்வு மாணவர்களை கண்காணிப்பதற்காக ஸ்டொக்ஹோம் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரொபர்ட் ரம்பேர்க் UCSC இற்கு வருகைதந்தார். ஸ்டொக்ஹோம் பல்கலைக்கழக பீட்டர் மொஸெவியல் அவர்களும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு மடிக்கணினி (laptop) கருத்திட்டத்தின் தற்போதய நிலைமை மற்றும் விளைவுகள் பற்றி மதிப்பிடுவதற்காக அதே காலப்பகுதியில் வருகைதந்தார். சென்னையில் இருந்து வந்த பேராசிரியர் ஆனந்தராமன் அவர்களால் பட்டதாரி மாணவர்களுக்கு விரிவுரை நடத்தப்பட்டது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் (NAS) மாணவர்கள் பட்டப் பின்படிப்பு கற்பது பற்றி கலந்துரையாடுவதற்காக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தைச் (NAS) சேர்ந்த இரண்டு பேர் UCSC இற்கு வருகைதந்தனர். ஐக்கிய அமெரிக்காவின் விசிடா மாநில பல்கலைக்கழகப் பேராசிரியர் அபூ ஆசாதுஸ்ஸமான், அவரின் CAPPLab ஆய்வுச் செயற்பாடுகள் பற்றி ஆளணியினர் மற்றும் மாணவர்களுக்கு விளக்கச் சொற்பொழிவாற்றினார்.

அட்டவணை 13: ஆய்வு பற்றிய சுருக்கம்

| விடயம் | பிரசுரிக்கப்பட்டவை | வணிகமயமானவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| ஆய்வுகளின் எண்ணிக்கை | 103 | - | 52 |
| புத்தாக்கங்களின் எண்ணிக்கை | - | - | - |
| சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 5 | - | - |
| புத்தகங்களின் எண்ணிக்கை | - | - | - |
| ஆக்கங்களின் எண்ணிக்கை | 53 | - | - |
| ஏனையவை | 1 | - | - |
| மொத்தம் | **59** | - | **52** |

**மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்**

பொருத்தமான ஆய்வுகளை அடையாளம்காணவும் செயற்படுத்தவும் பொறிமுறைகளை வடிவமைப்பது UCSC இன் இன்னொரு தந்திரோபாயமாகும். இறுதியாண்டு மாணவர்களுக்காக UCSC இன் வருடாந்த ஆய்வுக் கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து நடத்துவது தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றது. இந்த ஆண்டில் வெளிநாட்டு வெளிவாரி பரீட்சகர் ஒருவரின் பங்குபற்றலுடன் ஆளணியினரின் ஆய்வுகளைப் பரப்புவதற்காக ஆய்வு தினம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) சஞ்சிகையின் இரண்டு இணைய (online) வெளியீடுகள் மற்றும் அச்சு வெளியீடு என்பவற்றையும் UCSC ஆனது தொடர்ந்தும் பிரசுரித்து வருகின்றது. வளர்ச்சியடைந்து வரும் பிராந்தியங்கள் தொடர்பான சர்தேச தகவல் தொழல்நுட்ப மாநாடுகளை ஒழுங்குசெய்வதற்கான செயலமர்வுகள் UCSC இல் நடாத்தப்பட்டன. UCSC ஆனது ஆய்வு நிதியைப் பயன்படுத்தி ஆய்விலே சகல கல்வியாளர்களும் மேலும் ஈடுபாட்டுடன் பங்குபற்றுவதற்கான ஒரு பொறிமுறையை மீளாய்வு செய்துள்ளது.

UCSC இனது பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க வருடாந்த நினைவுப் பேருரையினை பேராசிரியர் ஜே.பி. திசாநாயக்க மூலம் சிறப்பாக UCSC இல் நடத்தியது. பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க நினைவு நிதியத்தை முதலாவது வருகைதரும் பேராசிரியரின் கீழ் கவருவதற்காக விளம்பரப்படுத்தியது. மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் அட்டவணை 14 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 14: மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| விடயம் | பங்குபற்றியது | பிரசுரிக்கப் பட்டது | சமர்ப்பிக்கப் பட்டது |
|---|---|---|---|
| சிரேஷ்ட கல்வியாளர்களின் உள்நாட்டுக் கருத்தரங்குகள் | 20 | 3 | 0 |
| சிரேஷ்ட கல்வியாளர்களின் சர்வதேசக் கருத்தரங்குகள் | 19 | 57 | 9 |
| UCSC மாநாடுகள் ( பிரித்தெடுக்கப்பட்டவை) | 85 | 17 | 15 |
| ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேசச் செயலமர்வுகள் (ICTer) | 223 | 37 | 51 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சஞ்சிகை (ICTer Journal) | 7 | 2 | 0 |
| மொத்தம் | **354** | **116** | 75 |

**கிடைத்த விருதுகள்**

இலங்கை ICTA அமைப்பின் e-Swabhimani ஆரம்பிக்கப்பட்டுள்ளதன் நோக்கமானது டிஜிடல் உள்ளடக்க ஆக்கங்களில் சிறப்பானவர்களை அங்கீகரிப்பதாகும். UCSC மாணவர்கள் 2010 இல் இருந்து பங்குபற்றிவருதுடன், விருதுகளையும் வெற்று வருகின்றனர். 2012 இல் UCSC மாணவர்கள் e-Science மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் "Facial Muscle Anotomy based approach for Forensic Reconstruction in Sri Lanka" எனும் சுதந்திரமான முறைமையை ஆங்கிலத்தில் தயாரித்து வெற்றிபெற்றனர். இது, ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக சட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவியல் மருத்துவத் திணைக்களத்தின் கலாநிதி ஏ.ரீ. தர்மரத்ன மற்றும் திரு. கே.டீ. சந்தருவன் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ், UCSC இன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப 4 ஆம் ஆண்டு மாணவர்களான ரோஷான் ராஜபக்ஷ, ஏ.கே. மடுகல்ல, பீ.ஐ.யூ. அமரசிங்ஹ மற்றும் வீ.எச். பத்மதிலக்க ஆகியோர் இணைந்து தயாரித்தனர். e-விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பிரிவின் கீழ் "Field Artillery Simulation System (FASS)" எனும் சுதந்திரமான முறைமையில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம், பாதுகாப்பு அமைச்சின பீரங்கிப் (Artillery) பாடசாலையும் ஒன்றுசேர்ந்து பணியாளர்களால் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட கருத்திட்டத்திற்கு UCSC வெற்றியீட்டியது. eLearning மற்றும் கல்விப் பிரிவில் சுதந்திர முறையில் "விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்களுக்கான ICT அடிப்படையிலான கல்வி" ("ICT based Education for student with Special Educational needs") படைப்புக்கு இரண்டு பாராட்டுச் சான்றிதழ்களும் கிடைத்தது. இது, UCSC இன் 4 ஆம் ஆண்டு ICT மாணவர்களான எம்.டீ. நதிர தரங்க பெரேரா, ரீ.ஜீ. இந்துணி ஷாமிக, தில்ருக்சி விஜேரத்ன மற்றும் டீ.பீ. மனோரி மதுபாஹினி விஜேசூரிய ஆகியோர்களால், கலாநிதி ஏ.ரீ. தர்மரத்ன மற்றும் கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டது. அத்துடன், 2012 e-Entertainment மற்றும் Games பிரிவில் UCSC இன் 2 ஆம் ஆண்டு மாணவர்களான கே.எச். மடுஷா குமாரசிறி மற்றும் எஸ்.எம்.டீ.ஆர். சுபசிங்ஹ ஆகியோரால் "Saasthara a Facebook apps' எனும் கருத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

ஹிரான் திலக்கரத்ன நிதியத்தின் 2011 இற்கான தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப் பின்படிப்பு ஆய்வில் சாதனைக்கான விருதினை திரு. கே.டீ. சந்தருவன் 2009-2011 காலப்பகுதியில் மேற்கொண்ட அவரது பட்டப் பின்படிப்பு ஆய்வுவேலைக்காக வழங்கப்பட்டது. உள்ளூர் மொழிகளின் வளர்ச்சிக்காக செய்யப்பட்ட பங்களிப்புகளுக்காக கலாநிதி ருவன் வீரசிங்ஹ மற்றும் திரு. ஹர்ஷா விஜேவர்தன ஆகியோர்களை ICTA அங்கீகரித்துப் பாராட்டியது. UCSC இன் கலாநிதி கே.பீ. ஹேவாகமகே அவர்களுக்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கான விருது (UCSC)-2011 வழங்கப்பட்டது.

அட்டவணை 15: ஆய்வு விருதுகள்

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விமான்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்நாட்டு விருதுகள் | 1 | - | - |
| தேசிய விருதுகள் | 2 | 3 | 4 |
| சர்வதேச விருதுகள் | - | - | - |
| ஏனையவை | 3 | - | - |
| மொத்தம் | **6** | **3** | **4** |

### கல்விசார் பணியாட்டொகுதியினர்

---

தகவல் முறைமை முகாமையாளர் பதவியானது எட்டு வருடங்களின் பின் இவ்வாண்டு நிரப்பப்பட்டது. கல்விசார் பணியாளரொருவர் தனது கலாநிதி (Phd) படிப்பை முடித்துவிட்டு வேலைக்குத் திரும்பினார். விடுமுறையில் சென்றிருந்த நிர்வாகியும் அதேபோல் நிகழ்ச்சித்திட்ட மற்றும் முறைமை பகுப்பாய்வாளரும் வேலையில் இருந்து விலகினர். கணினி பிரயோக உதவியாளர் பதவிகள் இரண்டு மற்றும் வரவேற்பாளர் பதவி ஒன்று என்பன இவ்வாண்டின் போது நிரப்பப்பட்டன. எனினும், அரைவாசி ஊழியர்களின் எண்ணிக்கைக்கு அண்மித்த வெற்றிடங்கள் நிலவுகின்றன. தனியார் துறையில் சிறந்த வெகுமதிகள் கிடைப்பதால் பயிற்சிபெற்ற தொழில்நுட்பவியல் ஆளணியினரை தக்கவைத்துக்கொள்வது மற்றும் சிறந்த இளவயது கல்வியாளர்களை கவர்ந்திழுப்பது உண்மையாகவே கடினமாகவுள்ளது. நிரந்தர பணியாட்டொகுதியினர் அன்றாட செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் அதேவேளை, UCSC ஆனது தனது சில நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதில் வருகைதரும் பணியாளர்களில் தங்கியுள்ளது.

சர்வதேச தரத்திலான மனித வளத்தைக் கவருவதற்காக அவுஸ்திரேலியா, சுவீடன் மற்றும் இந்தியாவிலிருந்து குறுகிய கால வருகைதரும் ஆய்வாளர்கள் இவ்வாண்டில் வரவழைக்கப்பட்டனர். UCSC இனால் பணியாட்டொகுதி பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டம் சுவீடனின் Umea பல்கலைக்கழகத்தின் Linnuaeus Palme கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், சுவீடன் பணியாளரால் வெற்றிகரமாக பயிற்சிநெறி கொழும்பில் நடாத்தப்பட்டது. Linnuaeus Palme கருத்திட்டத்தின் கீழ் சுவீடன் Umea பல்கலைக்கழக, கணினி விஞ்ஞான திணைக்களத்தின் கலாநிதி எரிக் பில்லிங் (Dr. Erik Billing) வருகைதந்தார். அவர் இங்கே இருந்த யூன் – யூலை காலப்பகுதியில் பட்டதாரி மற்றும் பட்டப் பின்படிப்பு வகுப்புக்களை நடாத்தினார்.

அட்டவணை 16 இல் UCSC இன் கல்விசார் பணியாட்டொகுதியினரின் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 16: பணியாளர் ஆராய்ச்சிப் பகுதிகள்

| மொழிமூலம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | உதவி விரிவுரையாளர் | போதனாசிரியர் |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி (P) | ஆங்கிலம் | - | 02 | 18 | 15* | - | 04 |
| கணினி (C) | ஆங்கிலம் | - | - | - | 01 | 04 | 07 |

*06 விடுமுறையில் உள்ளனர்.

**கல்விசாரா பணியாட்டொகுதியினர்: நிரந்தரம் (P) ஒப்பந்த / ஒப்படைப்பு (C/A)**

முகமைத்துவ மற்றும் தந்திரோபாய தகவல் முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கும் அமுல்படுத்துவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்பார்க்கப்பட்ட பாவனையார்களின் குறைந்த ஈடுபாடு காரணமாகப் பெறுபேறு உற்சாகமளிப்பதாக இல்லை. செயற்படுத்தப்பட்ட பரீட்சை செயலாக்க முறைமை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாடானது நிகழ்ச்சித்திட்ட மற்றும் முறைமை பகுப்பாய்வாளரின் பதவி விலகலினால் பாதிப்படைந்ததுடன், பல்கலைக்கழக முறைமையில் காணப்படும் குறைந்த சம்பள அளவுத்திட்டம் காரணமாக இப்பதவி இன்னும் நிரப்பப்படவில்லை. வெளிவாரி மற்றும் நீடிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் பட்டப் பின்படிப்பு கட்டணங்களை இணையதளம் மூலம் செலுத்துவதற்கான வசதி தொடர்ந்து வழங்கப்பட்டுவருகின்றது.

UCSC இன் கல்விசாரா பணியாளர் பற்றிய விபரங்கள் அட்டவணை 17 இல் தரப்பட்டுள்ளன. UCSC இன் கல்விசாரா பணியாளர்கள் மற்றும் கருத்திட்ட பணியாளர்கள் 100 பதவியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் நிரந்தர நியமனங்கள் 35 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பெரும்பாலான செயற்பாடுகள் ஒப்பந்த மற்றும் ஒப்படைப்பு பணியாளர்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. பிரதிப் பதிவாளரின் பதவி விலகலும் கூட நிறுவகத்தின் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியது.

25 வருட சேவையினைப் பூர்த்தி செய்த UCSC இன் பணியாட்டொகுதி அங்கத்தவர்களான திரு. கே.எஸ். குணதிலக்க, திரு. ஆர்.எம். வீரசிறி மற்றும் திருமதி அசோகா ராஜபக்ஷ் ஆகியோர்களை கொழும்புப் பல்கலைக்கழகம் அங்கீகரித்து பாராட்டியது.

அட்டவணை 17: கல்விசாரா பணியாளர்

| வகை | மிக சிரேஷ்ட (நிர்வாக) | சிரேஷ்ட பணியாளர் | கனஷ்ட பணியாளர் | சிற்றூழியர்கள் | கருத்திட்ட பணியாளர் |
|---|---|---|---|---|---|
| நிரந்தரம் P | 5 | 4 | 18 | 7 | - |
| ஒப்பந்த C | 1 | 4 | 19 | 14 | 21 |
| ஒப்படை A | 2 | - | 6 | - | 10 |

## பணியாட்டொகுதி பயிற்சியளித்தல் மற்றும் வெளிநாட்டு விடுமுறை

பயிற்சியளித்தல் விடுமுறை: வெளிநாட்டில் நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் இரண்டு கல்விசார் பணியாளர்கள் பங்குபற்றினர்.

கலாநிதி ரீ.என்.கே. தி சொய்சா (இந்தியா), திரு. டபிள்யூ.எம்.ஆர். வீரசூரிய (மலேசியா)

பத்து கல்விசார் பணியாளர்கள் வெளிநாட்டில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 12 தடவைகள் சென்றனர்

கலாநிதி டீ.ஏ.எஸ். அத்துகோரல (சிங்கப்பூர்), கலாநிதி எச்.ஏ. கல்தெர (தாய்லாந்து), கலாநிதி (திருமதி) வை. ஏக்கநாயக்க (ஸ்பெய்ன்), திரு. எம்.ஜீ.என்.ஏ.எஸ். பெர்னாந்து (ஸ்பெய்ன்), கலாநிதி (திருமதி) எம்.டீ.ஜீ.எஸ். குணதிலக்க (அவுஸ்திரேலியா), கலாநிதி சீ.ஐ. கெப்பெடியாகம (சீனா), பேராசிரியர் என்.டீ. கொடிக்கார (இந்தோனேசியா), கலாநிதி டீ.என். ரணசிங்க (சிங்கப்பூர்), கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ (இந்தியா, ஐக்கிய இராச்சியம்), பேராசிரியர் ஜீ.என். விக்கிரமநாயக்க (இந்தியா – இரு தடவை).

இரண்டு கல்வியாளர்கள் கற்கை விடுமுறையில் சென்றதுடன், அதில் ஒருவர் திரும்பியதும் கடமையில் இணைந்துகொண்டார். ஐந்து கல்வியாளர்கள் கற்கை விடுமுறையில் தொடருகின்ற அதேவேளை கலாநிதி (Phd) பட்டத்தை முடித்துக்கொண்டு திரும்பினார்.

புதியவர்: திரு. எச்.எம். சிறிவர்தன (யப்பான்), திரு. எஸ்.எஸ்.பீ. மாத்தரஆரச்சி (இலங்கை) (கடமையேற்றார்)

தொடர்வோர்: திரு. எச்.ஈ.எம்.எச்.பி. ஏக்கநாயக்க (சுவீடன்), திருமதி எல்.என்.சீ. தி சில்வா (இலங்கை), திருமதி எப்.எச்.ஏ.எம். பிரேமசந்திர (அவுஸ்திரேலியா), திருமதி ரீ.ஏ. வீரசிங்ஹ (சுவீடன்), திரு. எம்.ஐ.ஈ. விக்கிரமசிங்ஹ (மலேசியா)

திரும்பியோர்: கலாநிதி ரீ.எம்.எச்.ஏ. யூஸுப் (சுவீடன்)

ஏனையன: இரண்டு கல்விசாராதவர்கள் உட்பட பத்து பணியாளர் உறுப்பினர்கள் 13 தடவைகள் பிற காரணங்களுக்காக வெளிநாடுகளுக்கு விஜயம் செய்தனர்

கலாநிதி ரீ.என்.கே. தி சொய்சா (கொரியா), கலாநிதி ஏ.ரீ. தர்மரத்ன (சுவீடன்), திரு. கே.எஸ். குணதிலக்க (இந்தியா), திரு. டீ.என். குணவர்தன (இந்தியா), கலாநிதி கே.பீ. ஹேவாகமகே (பூட்டான், இந்தியா, யப்பான்), திரு. ஆர்.எஸ். மதநாயக்க (பூட்டான்), திரு. ஜீ.பீ. செனெவிரத்ன (UAE), திருமதி கே.பீ.சீ. ரத்னலதா (இந்தியா), கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ (பாக்கிஸ்தான்), பேராசிரியர் ஜீ.என். விக்கிரமநாயக்க (அவுஸ்திரேலியா, புரூனை)

நிதிச் செலவுகள்

## மீண்டெழும் செலவுகள்

பட்டதாரி நிகழ்ச்சிச் செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு திறைசேரி நிதி போதாமையால் UCSC ஆனது உழைத்த வருமானத்தையும் அன்றாட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியது. ஒரு பட்டதாரி மாணவனுக்கான செலவு ரூ. 149,000 ஆகும். UCSC அதன் உழைத்த வருமானத்தில் 16% ஆன 27 மில்லியனை உள்வாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்கு வழங்கியது. மீண்டெழும் செலவுகளின் விபரங்கள் அட்டவணை 18 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 18 : மீண்டெழும் செலவுகள் ரூபா 000'

| விடயம் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 68,015 | 79,931 | 92,840 |
| பிரயாணச் செலவுகள் | 484 | 1,132 | 528 |
| வழங்கல்கள் | 3,895 | 4,227 | 4,579 |
| பராமரிப்புகள் | 2,906 | 3,627 | 3,057 |
| ஒப்பந்த சேவைகள் | 23,453 | 26,675 | 29,701 |
| ஏனையன | 54,672 | 56,915 | 57,357 |
| மொத்தம் | **153,425** | **172,507** | **188,062** |
| அரசாங்க ஒதுக்கீடு | 65,381 | 83,102 | 91,802 |

மூலதனச் செலவுகள்

UCSC அதன் கணினி மற்றும் அலுவலக வசதிகளை மேம்படுத்துவதற்காக பௌதீக வளங்களில் முதலீடு செய்துள்ளது. இவ்வாண்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 4 ஆவது மாடி கிழக்குப் பகுதி நீடிப்பைப் பயன்படுத்துதல் உட்பட கட்டிட நீடிப்புச் செய்தல் நிர்மாணப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. நிதி மற்றும் நிருவாகப் பிரிவுகளில் உள்ள கணினிகளானது புதிய கணினிகளால் பிரதியீடு செய்யப்பட்டன. அச்சிடல் இயந்திரம், ஸ்கேன்னின் (scanning) வசதியுடனான அச்சுப்பொறி, தடுப்புச்சுவர் (firewall), வலையமைப்பு விசைமாற்று சாதனங்கள் கொள்வனவு என்பன தகவல் தொழில்நுட்ப (IT) வசதிகளை மேம்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டன. கனரகவேலை அச்சிடல் பொறி, சிறிய புத்தகம் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை ஒப்பிட்டுப்பார்க்கும் இயந்திரம் என்பன நிறுவகத்தின் பாரிய அச்சிடல் வேலைகளை நிறைவேற்றுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டன. மூலதனச் செலவுகளின் விபரங்கள் அட்டவணை 19 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 19: மூலதனச் செலவுகள் ரூபா 000'

| விடயம் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் கைகொள்ளல் | 6,043 | 2,656 | 14,604 |
| இயந்திரங்களை கைகொள்ளல் | - | - | - |
| கட்டடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களை கைகொள்ளல் | - | 15,420 | 22,327 |
| ஏனையன | 15,257 | 10,099 | 4,076 |
| மொத்தம் | **21,300** | **28,175** | **41,007** |
| அரசாங்க ஒதுக்கீடு | 3,420 | 16,000 | 19,150 |

**கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)**

UCSC ஆனது ஆய்வு அடிப்படையிலான கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக பொது மற்றும் தனியார் துறையினருக்கு ஆலோசனை சேவைகளையும் நடாத்துகின்றது. UCSC ஆனது கடந்தகால அதன் சில செயற்பாடுகள் மூலம் பிரசித்திபெற்றுள்ளது. 1981 ஆண்டிலிருந்து தேசிய ரீதியிலான தேர்தல்களில் UCSC ஆனது உதவி வழங்கிவருகின்றது. UCSC இன் மென்பொருள் மூலம் தற்போது பிறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் கருமபீடத்தின் மூலமாக அதேயிடத்தில் வழங்கப்படுகிறது. UCSC இன் முயற்சியின் ஊடாக சிங்கள யுனிகோட் (Unicode) வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தியின் பெறுபேறாக நவீன கணினிகளில் சிங்கள மொழி பயன்படுத்த உதவியுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக மாணவர் தெரிவு மற்றும் ஒதுக்கீட்டு முறைமை அமுலாக்கமானது UCSC இனால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பிரதான அபிவிருத்தி நடவடிக்கையொன்றாகும். இது பல்கலைக்கழக அனுமதிக்காக செலவிடப்பட்ட நேரத்தைக் கனிசமானளவு குறைக்கும் என்பதுடன், பின்பற்றப்பட்ட செயல்முறைகள் சரியென்பதுமாகும். UCSC ஆனது நீதிமன்ற வழக்குகளில் உதவுவதற்காக டிஜிடல் சட்ட நடவடிக்கைக்கான அறிவியல் (Digital Forensic) செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துவருகிறது.

UCSC ஆனது HETC Window-4 இல் ஆய்வுக் கருத்திட்டங்கள் மற்றும் புத்தாக்க முன்மொழிவு ஆய்வுகளை பரவச்செய்தல் மற்றும் வணிகமயமாக்கல்களில் வெற்றிகரமாக ஈடுபட்டது. திட்டமிடப்பட்ட எல்லா நடவடிக்கைகளுடன் HETC EDP செயற்பாடுகளையும் இவ்வாண்டினுள் தொடங்கியது. உலக வங்கி நிதியின் மூலம் பூட்டானின் றோயல் பல்கலைக்கழகத்திற்கான செயற்திட்டமொன்றை தீக்ஷ்ன நிறுவனம் ஊடாக UCSC ஆனது நிறைவேற்றியுள்ளதுடன், அவர்களது பணியாட்டொகுதியினருக்கு ஈ-லேனிங் (e-learning) பற்றி வெற்றிகரமாக பயிற்சியினையும் வழங்கியுள்ளது. UCSC இற்குச் சொந்தமான தீக்ஷ்ன எனும் கம்பனியானது ரூ. 22 மில்லியன்களை உழைத்துள்ளதுடன், அதில் வெளிநாட்டுச் செலாவணியாக உலக வங்கி நிதியிடப்பட்ட கருத்திட்டங்களான ICTA மற்றும் HETC மூலம் தனியொரு வளக் கருத்திட்டத்தினால் ரூ. 4 மில்லியன் ஈட்டப்பட்டது.

பல துறைகளிலும் பலம் வாய்ந்த ஆய்வுக் குழுவொன்றை UCSC ஆனது கொண்டுள்ளது. வடிமைத்தலும் மாதிரியும், ஈ-லேனிங் (e-learning) மற்றும் மொழித் தொழில்நுட்பவியல் போன்றவை அவற்றில் பாவணையாளர் சமூகத்தை அடைந்தவையாகும். M-ATM, FASS மற்றும் Copsayura உட்பட கருத்திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. UCSC இனால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் அவற்றுக்கான செலவு விபரங்கள் அட்டவணை 20 மற்றும் அட்டவணை 21 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 20: மீண்டெழும் செலவுகள் ரூபா 000'

| பெயரும் விபரமும் | மானியம் | நிதியிடும் நிறுவனம் | TCE | RFA | DF |
|---|---|---|---|---|---|
| M-ATM (2008-11) | 7,596 | Royal Inst. of Tech.(KTH), சுவீடன் | | | |
| டெலி சென்டர்.Org (2010-11) | 2,856 | டெலிசென்டர் பவுன்டேஷன், பிலிப்பைன்ஸ் | | | |
| வெளிநாட்டு நிதி | **10,452** | | | | |
| FASS (2011-2012) | 1,308 | பாதுகாப்பு அமைச்சு, இலங்கை | | | |
| Copsayura (2011-13) | 1,934 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| உள்நாட்டு நிதி | **3,242** | | | | |

TCE – மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு; RFA – விண்ணப்பங்களுக்கான கோரிக்கை;
DF – கழிவு விடயம்

**கருத்திட்ட செலவினம் (உள்நாட்டு/வெளிநாட்டு)**

அட்டவணை 21: கருத்திட்ட செலவினம் ரூபா 000'

| பெயர் | TCE மீ/வ திரட்டிய கிரயம் | 2011 ஆண்டில் செலவு | 2012 ஆண்டில் செலவு | 2012.12.31 இல் உள்ளபடி மொத்த செலவு | பௌதீக முன்னேற்ற % |
|---|---|---|---|---|---|
| M-ATM | 4,878 | 787 | 697 | 6,362 | 84% |
| Tele centre.Org | 1,828 | 562 | 168 | 2,558 | 90% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெளிநாட்டு நிதி செலவு | **6,706** | **1,349** | **865** | **8,920** | |
| FASS | - | 40 | 970 | 1,010 | 77% |
| NSF | - | - | 1,709 | 1,709 | 88% |
| உள்நாட்டு நிதி செலவு | - | **40** | **2,679** | **2,719** | |

**நிதிச் செயலாற்றல் (செலவு)**

அட்டவணை 22: நிதிச் செயலாற்றல் (செலவினம்) ரூபா 000'

| விடயம் | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு/மிகை |
|---|---|---|---|
| கருத்திட்டமல்லாத மீண்டெழுதல் | 190,370 | 172,507 | 17,863 |
| கருத்திட்டமல்லாத மூலதனம் | 84,425 | 28,175 | 59,250 |
| கருத்திட்டம்- உள்நாட்டு நிதி | 2,679 | 2,679 | - |
| கருத்திட்டம் வெளிநாட்டு நிதி | 865 | 865 | - |
| மொத்தம் | **278,339** | **204,226** | **74,113** |

**நிதிச் செயலாற்றல் (உழைத்த வருமானம்)**

அட்டவணை 23: நிதிச் செயலாற்றல் (உழைத்த வருமானம்)

ரூபா 000'

| வருமான மூலகம் | ஒதுக்கீடு | திரட்டுதல் | பற்றாக்குறை /மிகை |
|---|---|---|---|
| பட்டதாரிக் கற்கைகள் | 96,366 | 94,494 | 1,872 |
| பட்டப் பின்படிப்பு கற்கைகள் | 55,881 | 67,170 | (11,289) |
| ஆலோசனைகள் | 28,974 | 21,210 | 7,764 |
| வெளிவாரிப் பட்டம் | 65,308 | 69,823 | (4,515) |
| ஏனையவை | - | - | - |
| மொத்தம் | **246,529** | **252,697** | **(6,168)** |

பட்டதாரி வருமானம் நீங்கலாக UCSC ஆனது ரூ. 195,000 ஈட்டியது. பிரதான பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக நிறுவனங்கள் அதிகமானவற்றை விடவும் UCSC இன் உழைத்த வருமானமானது உயர்வானதாகும்.

### நிதிச் செயலாற்றல் ஆய்வு

அட்டவணை 24: நிதிச் செயலாற்றல் பகுப்பாய்வு ரூபா 000'

| விடயம் | வாய்ப்பாடு | ஒரு மாணவனுக்கான செலவு |
|---|---|---|
| ஒரு மாணவனுக்கான மீண்டெழும் செலவுகள் **(RE)** | RE / மாணவர் எண்ணிக்கைப பலம் | 149 |
| ஒரு மாணவனுக்கான மீண்டெழும் செலவுகள் **(CE)** | CE / மாணவர் எண்ணிக்கைப பலம் | 42 |
| மொத்தம் | | **191** |

### உட்கட்டமைப்பு வசதிகள்

வரையறுக்கப்பட்ட இடத்தினுள்ளே செயலாற்றும் UCSC நிறுவகத்திற்கு விரிவுரை நடத்துவதற்கு கூட போதிய இடவசதியில்லை. மாணவர்களுக்கு சிற்றுண்டிச்சாலை, பொது மற்றும் கற்பிக்கும் அறைகளில் போதிய இடவசதியில்லை. பல்கலைக்கழகத்தினால் காணியை வழங்க முடியாதுள்ளதால் UCSC ஆனது மேற்குக் கட்டடப் பகுதியையும் நான்காம் மாடியையும் கட்டி விஸ்தரிக்க தொடங்கியது பட்டதாரி பயிலுநர்களின் வகுப்பறை குறைபாடுகளை நிவர்த்திசெய்யவும் முழுநேர ஆய்வு மாணவர்களுக்கு வசதி செய்துகொடுக்கவும் ஆகும். இவ்வாண்டின் போது கிழக்குப் பகுதி விரிவுரை மண்டபம் பூர்த்திசெய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளது.

குறுங்கால உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைகளுக்கு முகங்கொடுப்பதுடன், விரிவாக்கல் திட்டமானது மத்திய மற்றும் நீண்ட கால இலக்குகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள சிற்றுண்டிச்சாலை அமைவிடத்தில் சிற்றுண்டிச்சாலையையும் நிருவாகக் கட்டடத்தையும் நிர்மாணிப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், விரிவுரை மண்டபங்கள்/கற்கும் அறைகளுடன் இணைந்த கேட்போர்கூடமொன்றின் மூலம் தற்போதுள்ள கேட்போர் கூடத்தை மீளமைப்பது மத்தியகால இலக்குகளாகும். நீண்டகால இலக்காக கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குப் புறம்பாக கட்டடங்களை நிர்மாணிப்பதன் அவசியம் இனங்காணப்பட்டுள்ளது. கட்டட வேலைகள் பற்றிய விபரங்கள் அட்டவணை 25 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 25: உட்கட்டமைப்பு ரூ. 000'

| உட்கட்டமைப்பு விபரம் | செலவினம் (ரூ.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| UCSC கட்டட விஸ்தரிப்பு | 22,328 | 96% |

## இந்த அறிக்கையுடன் தொடர்புடையவேறு ஏதேனும் விபரங்கள் /செயலாற்றல்

உள்நாட்டு மற்றும் சர்வதேச தெரிகிற தன்மையை அதிகரிப்பதற்காக UCSC இனது செயற்பாடுகளை அச்சு ஊடகத்தினுள் உட்படுத்தலை பேணிச்செல்வதுடன், UCSC இன் இணையதளத்தை மீளவடிவமைப்பதன் மூலம் பிரசன்னத்தை மேம்படுத்தவும் பட்டது.

தகவல் தொழில்நுட்பக் கல்வியையும் உற்பத்திகளையும் எல்லைக்கப்பால் கொண்டு செல்வது அதன் சமூகப் பொறுப்புக்களில் ஒன்றாக UCSC கருதுகிறது. மீளாய்வாண்டின் போது உயர் தர மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சியொன்றை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து அறிமுகப்படுத்துவதில் UCSC பங்காளியாக இருந்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் (SLBC) இணைந்து ஒவ்வொரு புதன்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை சமூக நிகழ்ச்சியினை UCSC ஆனது தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது. சர்வதேச ஒலிம்பியாட் தகவலியல் உட்பட மென்பொருள் போட்டிகளை நடாத்துவதற்காக UCSC தனது ஒத்துழைப்பினை கல்வி அமைச்சுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்கியது. UCSC ஆனது வெசக் பண்டிகையின் போது டிஜிடல் பந்தலினை 3 ஆவது தடவையாகவும் காட்சிப்படுத்துவதில் ஈடுபட்டது.

பல்கலைக்கழகத்தினுள் உள்ளே மற்றும் வெளியே ஆகிய இரண்டிலும் சமூகப் பொறுப்பை வளர்ப்பதற்கு UCSC ஆனது கூடிய சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குகின்றது. மாணவர்களால் பல செயலமர்வுகள் ஒழுங்குசெய்து நடத்தப்பட்டுள்ளன. அறுகம்குடா சென்ற UCSC இன் வருடாந்த நலன்புரி சுற்றுலாவில் பணியாட்டொகுதியினரும் அவர்களின் குடும்பத்தினரும் 180 பேருக்கும் அதிகமானோர் பங்குபற்றினர். UCSC ஆனது பணியாளர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றது.

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகம்

2012 திசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான இணைந்த ஐந்தொகை

| சொத்துக்கள் | 2012<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|
| நடைமுறையில்லாச் சொத்துக்கள் | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | | |
| கட்டடம் | 12,643,800 | 13,609,495 |
| ஆய்வு கூடம், கற்பித்தல் உபரகணம், தளபாடம் மற்றும் பொருத்துகள் | 60,601,400 | 63,508,994 |
| நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகளும் | 990,690 | 882,382 |
| மோட்டார் வாகனங்கள் | 3,774,644 | 5,015,623 |
| மொத்தம் | 78,010,534 | 83,016,494 |
| மூலதன சொத்துக்களின் மேம்படுத்தல் | 30,413,602 | 31,309,842 |
| நிர்மாணிப்பு - முடிவுறாத வேலை | 37,748,579 | 15,420,756 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| பொருட்கள் இருப்பு | 2,442,445 | 2,588,631 |
| பெறவேண்டியவை, முற்கொடுப்பனவு | 38,602,043 | 33,202,229 |
| SIDA நிதி | - | 60,429,110 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 581,177,143 | 482,533,173 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | 622,221,631 | 578,753,143 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 768,394,353 | 708,500,240 |
| **சொத்துக்கள்/பங்குரிமை** | | |
| மூலதனமும் ஒதுக்கமும் | | |
| மூலதனம் | | |
| செலவிடப்படாத மூலதன மானியம் | 4,857,245 | 3,361,251 |
| மூலதன மானியம் – செலவிடப்பட்டது | 57,564,972 | 39,984,898 |
| வெ.நா. நிதி கருத்திட்.– செலவிடப்படாதது | 1,336,470 | 7,823,342 |
| வெ.நா. நிதி கருத்திட்.– செலவிடப்பட்டது | 30,803,032 | 11,684,294 |
| வேறுபட்ட மானியம் | - | 37,430,874 |
| கொழும்பு பல்கலைக்கழக பங்களிப்பு | 8,155,714 | 8,155,714 |
| மொத்தம் | 102,717,433 | 108,440,373 |
| **ஒதுக்கங்கள்** | 433,117,827 | 342,298,905 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதி | 67,859,485 | 54,954,738 |
| நடைமுறையில்லா பொறுப்புக்கள் | | |
| ஓய்வூதியப் பயன்கள் | 27,573,818 | 23,393,238 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| ஏனைய சென்மதிகள், கொடுப்பனவுகள் | 137,051,170 | 117,960,098 |
| SIDA நிதி | - | 60,429,110 |
| வங்கி மேலதிகப்பற்று | 74,620 | 1,023,778 |
| மொத்தம் | 137,125,790 | 179,412,986 |
| மொத்த சொத்துக்கள்/பங்குரிமை | 768,394,353 | 708,500,240 |

2013.02.28

பணிப்பாளர் (கொ.ப.கணி.கற்.நிறு.)

சிரேஷ்ட உதவி நிதியாளர்

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகம்

2012 திசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான இணைந்த வரவு செலவுக் கணக்கு

| | 2012<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|
| **பட்டமாணி நிகழ்ச்சித் திட்டம் - வருமானம்** | - | - |
| அரச மானியம் | 91,802,000 | 83,102,728 |
| நிறுத்தப்பட்ட வருமானம் - மானியங்கள் | 14,629,135 | 19,778,039 |
| ஏனையவை | 2,671,894 | 4,879,143 |
| | 109,103,029 | 107,759,910 |
| **பட்டமாணி நிகழ்ச்சித் திட்டம் - செலவு** | - | - |
| பணியாளர் கொடுப்பனவுகள் | 60,733,791 | 50,717,167 |
| போக்குவரத்துச் செலவுகள் | 37,701 | 387,447 |
| வழங்கல்கள் | 2,927,786 | 2,424,562 |
| ஒப்பந்தச் சேவைகள் | 26,818,704 | 24,159,062 |
| ஓய்வூதிய பயன்கள் | 13,726,350 | 8,133,475 |
| சந்தாக்கள், பங்களிப்புக்கள், அங்கத்துவ கட்டணம் | 36,929 | 44,139 |
| பணியாளர் அபிவிருத்தி | 106,270 | 349,643 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 6,825,057 | 6,094,293 |
| தேய்மானம் | 14,629,135 | 18,551,317 |
| மொத்தம் | 125,841,723 | 110,861,105 |
| பட்டமாணி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பற்றாக்குறை | (16,738,694) | (3,101,195) |
| **விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம்** | - | - |
| விஞ்ஞான முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | 41,891,163 | 30,760,124 |
| வெளிவாரி பட்டங்கள் நிலையம் | 40,714,205 | 43,468,371 |
| கணினி சேவைகள் நிலையம் | 2,137,334 | 654,128 |
| உயர் தர டிஜிடல் ஊடக தொழில்நுட்ப நிலையம் | 827,464 | 175,248 |
| e கற்றல் நிலையம் | 18,105,244 | 1,972,517 |
| தொழில் அபிவிருத்தி நிலையம் | (520,064) | (461,413) |
| விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்ட மேலதிக வருமானம் | 103,155,346 | 76,568,975 |
| **கருத்திட்டங்கள்** | - | - |
| வெளிநாட்டு நிதியிடப்பட்ட பொது கருத்திட்டம் | 10,792,226 | - |
| ICT மாநாடு - 2012 | 147,339 | - |
| IDRC Vertual கிராமம் | 95,992 | 65,944 |
| கருத்திட்டங்களிலிருந்து மேலதிக வருமானம் | 11,035,557 | 65,944 |
| தேறிய மேலதிக வருமானம் /(பற்றாக்குறை) | 97,452,209 | 73,533,724 |

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

### கொழும்பு பல்கலைக்கழகம்

2012 திசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான இனைந்த காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2012 | 2011 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | ரூ. | ரூ. |
| வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை) | 97,452,209 | 73,533,724 |
| **சீராக்கல்கள்** | | |
| தேய்மானம் | 25,210,600 | 25,380,877 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 4,407,740 | 3,233,192 |
| தேய்மானத்திற்கான மேலதிக ஏற்பாடு | 0 | (67,655) |
| நிறுத்தப்பட்ட வருமானம் | (22,142,464) | (23,974,726) |
| முன்னர் பொறப்பட்ட மானியத்திலிருந்து மாற்றல் | (10,901,365) | (5,245,357) |
| ஆதனம், பொறி, உபகரணம் விற்பனை இலாபம் | (96,450) | (1,283,000) |
| நாணயமாற்றில் கிடைப்பனவு | (11,616,474) | (784,747) |
| தொழிற்படு மூலதன மாற்றல் மிகை/குறைவு | 82,313,796 | 70,792,308 |
| தொழிற்படு மூலதன மாற்றல் | 9,792,438 | 8,070,977 |
| தொழிற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் | 92,106,234 | 78,863,285 |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் காசுப்பாய்ச்சல் | | |
| ஆதனம், பொறி, உபகரணம் கொள்வனவு | (16,146,779) | (28,430,366) |
| நிர்மாணித்தலுக்கான கொடுப்பனவு | (22,327,823) | - |
| ஆதனம், பொறி, உபகரணம் விற்பனை மூலம் பெற்றது | 96,450 | 1,283,000 |
| ஆதனம், பொறி, உபகரணம் புனரமைப்பும் மேம்படுத்தலும் | (1,905,331) | (561,288) |
| | 51,822,751 | 51,154,631 |
| | - | - |
| நிதியிடல் நடவடிக்கை மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் | | |
| பெற்றுக்கொண்ட மூலதன மானியம் | 19,150,000 | 18,205,340 |
| பெற்றுக்கொண்ட கருத்திட்ட மானியம் | 5,639,052 | 6,202,608 |
| பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்ட மீதிகளின் மாற்றல் | (2,503,889) | (5,805,939) |
| NeLC திட்ட மாற்றம் | - | (379,400) |
| ICT மாநாடு | 1,191,152 | - |
| பணிக்கொடை செலுத்தியது | (227,160) | (73,688) |
| வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து பெற்றவை | 12,904,748 | 12,093,420 |
| காசும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/குறைவு | 87,976,654 | 81,396,972 |
| நாணயமாற்றில் கிடைப்பனவு/ (நட்டம்) | 11,616,474 | 784,747 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவை | 481,509,396 | 399,327,677 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவை | 581,102,523 | 481,509,396 |

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

### நிதியியல் முக்கிய அம்சங்கள்

ரூ. '000

| நிதி ஆண்டு | **2012** | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| ஐந்தொகை | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 481,510 | 401,220 | 327,808 | 260,935 | 201,245 | 164,656 |
| பெறவேண்டியவைகளும் முற்கொடுப்பனவுகளும் | **38,602** | 33,202 | 35,580 | 34,859 | 32,253 | 19,219 | 13,058 |
| பொருட்கள் இருப்பு | **2,442** | 2,588 | 3,251 | 2,404 | 2,126 | 1,548 | 1,859 |
| UCSC முகாமை செய்யும் SIDA நிதி | - | 60,429 | 222,763 | 186,424 | 77,020 | 81,555 | 86,432 |
| UCSC முகாமை செய்யும் LEARN நிதி | - | - | 51,256 | 74,896 | 49,024 | 61,861 | 27,695 |
| மூலதன சொத்துக்களின் மேம்படுத்தல் | **30,413** | 31,309 | 34,381 | 21,694 | 20,455 | 18,918 | 16,231 |
| நிர்மாணிப்பு - முடிவுறாத வேலை | **37,749** | 15,420 | - | - | - | - | - |
| ஆதனம், பொறி, உபகரணம் | **78,011** | 83,016 | 81,261 | 75,535 | 83,684 | 88,079 | 115,581 |
| *மொத்தச் சொத்துக்கள்* | 187,217 | 707,474 | 829,712 | 723,620 | 525,497 | 472,425 | 425,512 |
| மூலதனம் | **102,717** | 108,440 | 105,296 | 108,690 | 109,010 | 102,707 | 124,218 |
| ஒதுக்கீடுகள் | **433,118** | 342,299 | 272,126 | 232,899 | 179,578 | 138,765 | 109,647 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் | **67,859** | 54,954 | 43,215 | 30,110 | 22,528 | 19,597 | 18,457 |
| ஏனைய பொறுப்புக்கள் | **164,700** | 201,781 | 409,075 | 351,921 | 214,381 | 211,356 | 173,190 |
| *மொத்தப் பொறுப்புக்களும் நிதிகளும்* | 768,394 | 707,474 | 829,712 | 723,620 | 525,497 | 472,425 | 425,512 |
| | | - | | | | | |
| அரச மானியம் - மீண்டெழும் | **91,802** | 83,102 | 65,381 | 68,610 | 71,555 | 78,695 | 52,850 |
| அரச மானியம் - மூலதனம் | **19,150** | 16,000 | 4,920 | 4,167 | 11,055 | 10,560 | 36,740 |
| பெறப்பட்ட மொத்த அரச மானியம் | **110,952** | 99,102 | 70,301 | 72,777 | 82,610 | 89,255 | 89,590 |
| மீண்டெழும் செலவு - பட்டதாரி நிகழ்ச்சி | **111,212** | 92,310 | 80,120 | 84,461 | 80,083 | 76,564 | 65,617 |
| மூலதனச் செலவு | **31,178** | 28,628 | 21,301 | 8,542 | 12,764 | 12,305 | 29,064 |
| மொத்தச் செலவு பட்டதாரி நிகழ்ச்சி | **142,390** | 120,938 | 101,421 | 93,003 | 92,847 | 88,869 | 94,681 |
| கிடைக்கபெற்ற வருமானத்தின் பங்களிப்பு | **31,438** | 21,836 | 31,120 | 20,226 | 10,237 | - | 5,091 |
| கிடைக்பெற்ற மொத்த தேறிய வருமானம் - % | **16%** | 14% | 25% | 17% | 10% | 0% | 9% |
| கிடைக்கப்பெற்ற தேறிய வருமானத்தின் பங்களிப்பு - % | **28%** | 28% | 62% | 35% | 18% | 0% | 21% |
| கிடைக்கபெற்ற வருமானம் | **194,230** | 159,429 | 123,267 | 115,690 | 105,426 | 68,494 | 58,981 |
| மீண்டெழும் செலவு - விரிவாக்க திட்டம் | **82,390** | 80,197 | 73,313 | 58,399 | 47,316 | 40,117 | 35,141 |
| வெளிநாட்டு நிதி. திட்டங்களுக்காக பெறப்பட்ட மானியம் | **5,639** | 6,202 | 93,581 | 104,834 | 70,969 | 35,700 | 46,356 |
| உள்வாரி மாணவர் எண்ணிக்கை | **737** | 737 | 739 | 748 | 754 | 584 | 592 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | **144** | 144 | 151 | 162 | 156 | 147 | 139 |
| மாணவரொருவருக்கான கிரயம் வருடத்திற்கு ('000) | 151 | 125 | 108 | 113 | 106 | 131 | 111 |
| பணியாளரொருவருக்கான கிரயம் வருடத்திற்கு ('000) | **670** | 578 | 457 | 414 | 384 | 372 | 359 |

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
## AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: ඊයි/සී/යූසීඑස්සී/ 2012/ එෆ්ඒ
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date: 2014 ජනවාරි 17 දින

UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING
23 JAN 2014
DIRECTOR'S OFFICE

අධ්‍යක්ෂ,

කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනය.

**කොළඹ විශ්වවිද්‍යාලයට අනුබද්ධිත පරිගණක අධ්‍යයන ආයතනයේ 2012 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2002 අංක 01 දරන කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතන නියමාවලියේ 23 වන වගන්තිය හා 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 108 (1) උපවගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

සමාංක හා 2013 ඔක්තෝබර් 31 දිනැති මාගේ ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එච්.ඒ.එස්. සමරවීර
විගණකාධිපති.

පිටපත් :
1. සභාපති , විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
2. ලේකම් , උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
3. ලේකම් , මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
4. උපකුලපති , කොළඹ විශ්වවිද්‍යාලය



අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. சீஈ/சீ /யூசீஎஸ்சீ/2012/எப்ஏ

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 2013 ஒக்தோபர் 31

பணிப்பாளர்
கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைகள் நிறுவகம்.

**கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைகள் நிறுவக சட்டவிதிகளின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச்செயலாற்றல் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகல்வல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2002 இன் 1 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 23 ஆம் பிரிவு மற்றும் 108(1) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை 2013 யூலை 23 ஆந் திகதி நிறுவகப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக் கூற்றுக்கள்**

---

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் நிலைமையையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்**

---

கணனிக் கற்கைகள் நிறுவகம் "தீக்சன" என்ற பெயரில் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை தாபித்திருந்ததுடன் அதன் முகாமைத்துவ சபையின் 80 சதவீதமானோர் கணனிக் கற்கைகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையாகக் காணப்பட்டதுடன் அந்த உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணனிக் கற்கைகள் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இக்கம்பனி தொடர்பில் எவ்வித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிக்கப்பட்டு புத்தகப் பெறுமதி பூச்சியமாகவுள்ளதும் பயன்பாட்டிலுள்ளதுமான ரூபா 2,775,000 கிரயமான வான் வாகனம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தினால் ஏனைய நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்த ஒன்பது செயற்திட்டங்களில் மிகையாகக் காணப்பட்ட ரூபா 41,336,035 இனை வருமானத்திற்கு எடுப்பதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பாக பல வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(இ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் படி அட்டுறு முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விடுதி வாடகை வருமானத்தினை காசு அடிப்படையில் கணக்கீடு செய்திருந்தமை காரணமாக விடுதி வாடகை வருமானம் ரூபா 35,933 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) நிறுவகத்தினால் 2006 மார்ச் 31 ஆந் திகதிய 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 37(2)(ஆ) பிரிவின் படி, நிலையான வைப்புக்கள் வட்டியிலிருந்து அந்தந்த ஆண்டுகளில் குறைக்கப்பட்ட மொத்தம் ரூபா 3,568,155 கூட்டுத்தொகையினை நிறுத்தி வைத்தல் வரிச் செலவினமாக கணக்கீடு செய்யாது நடைமுறைச் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மொத்தம் ரூபா 471,048 தொகையான பெறவேண்டிய மீதிகள் மற்றும் மொத்தம் ரூபா 4,800,790 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் 1 முதல் 8 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட வீச்சில் தீர்க்கப்படாதிருந்தன.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** |
|---|---|
| (அ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 394(அ) | 2010 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் பொறுப்பாக காட்டப்பட்டிருந்த ரூபா 75,878 பெறுமதியான இரத்துச்செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபனவிதிக் கோவையின் xxvi ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் உப பிரிவு | நிறுவகத்தில் காணப்படுகின்ற அனைத்து நடைமுறையல்லா சொத்துக்களும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 465,902,538 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்களை மெய்மையாய்வு செய்து மெய்மையாய்வுச் சபை அறிக்கை 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2011 ஏப்ரல் 04 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4 (அ) ஆம் ஆலோசனை மற்றும் உயர் கல்வி அமைச்சின் 2011 சனவரி 20 ஆந் திகதிய 2011/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆய்வுப் படிகளிற்கு உரித்தினைப் பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழகத்தின் ஆய்வுப் பரிந்துரைச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முகாமைத்துவத்திற்கான குழுவால் ஆராய்ச்சிப் பிரேரணைகளிற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக முகாமைத்துவக் கலைச் சபையின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கல்விசார் பதிவியணியனர் 25 பேருக்கு மீளாய்வாண்டின் சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலத்தில் ரூபா 2,060,529 படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) 2002 இன் 01 ஆம் இலக்க கணனிக் கற்கைகள் நிறுவக சட்டவிதிகளின் 13ஆம் பிரிவின் 2(1)(ஆ) | ஆய்வுப் படிகளை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு ஆராய்ச்சி செயன்முன்னேற்றக் குழு திருப்தியடைதல் வேண்டுமாயினும், 07 விரிவுரையாளர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 557,175 ஆய்வுப் படிகளிற்காக ஆராய்ச்சி செயன்முன்னேற்றக் |

குழு திருப்தியடைந்திருக்கவில்லை.

| | |
|---|---|
| (ஈ) 2009 யூன் 03 ஆந் திகதிய யூஜீசீ/ஜேயூஏ/2/பீஜீஎஸ்/6 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் | பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு பாடநெறிக்காக விரிவுரைகளை நடாத்தும் விரிவுரையாளர்களிற்காக மணித்தியாலத்திற்கு ரூபா 2,500 வீதம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2012 சனவரி மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரை விரிவுரை மணித்தியாலத்தற்கு ரூபா 3,000 வீதமும் ரூபா 4,000 வீதமும் ரூபா 2,840,250 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 5,650,218 மிகையொன்றானதுடன் அதற்கு முன்னைய ஆண்டுக்கான நேரெதிரான பற்றாக்குறை ரூபா 9,569,010 ஆகும். மீண்டெழும் செலவினங்களிற்கான ரூபா. 91,802,000 அரசாங்க மானியம் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 97,452,218 வரை முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்கான ரூபா 83,102,728 அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 73,533,724 மிகையாகியிருந்தது. குறிப்பாக மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியம் ரூபா 8,699,272 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் வருமானம் ரூபா 31,579,250 ஆல் அதிகரித்திருந்தமையே மீளாய்வாண்டில் ரூபா 23,918,500 முன்னேற்றம் ஏற்படுவதற்கு காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நன்னடத்தை விரிவுரையாளர் ஒருவர் 2005 திசெம்பர் 31 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன் ரூபா 798,589 பிணைமுறி நிறுவகத்திற்கு

இழப்பாகியிருந்தது. 2006 நவம்பர் 16 ஆந் திகதி முதல் 03 சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபரிடமிருந்து விளக்கம் கோரப்பட்டிருந்த போதிலும், அவ்விளக்கமளிப்பு கிடைக்காமையால் சட்டரீதியான நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன. இத்தொகையினை ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விரிவுரையாளர் ஒருவர் 2004 ஒக்தோபர் 01 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன் அறவிடப்பட வேண்டியிருந்த பிணைமுறிப் பெறுமதி ரூபா 1,311,691 ஆகும். 2006 ஒக்தோபர் 10 ஆந் திகதி இப்பிணை முறியினை செலுத்துமாறு விரிவுரையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பரிசோதனைத் திகதி வரைக்கும் அப்பிணைமுறி செலுத்தப்படாதிருந்ததுடன் விரிவுரையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு நிறுவனம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) விரிவுரையாளர் ஒருவர் 2004 நவம்பர் 01 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன் அறவிடப்பட வேண்டியிருந்த பிணைமுறிப் பெறுமதி ரூபா 3,440,576 ஆகும். விரிவுரையாளரின் தற்போதைய முகவரியினை கண்டுபிடிக்க முடியாமையால் சட்ட ரீதியான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு 2005 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சட்டமா அதிபரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், 8 வருடங்கள் கடந்த பின்னரும் நிறுவகத்தினால் சட்டமா அதிபரிடம் விசாரித்தறிந்திருக்கவில்லை.

(ஈ) விரிவுரையாளர் ஒருவர் 2004 சனவரி 01 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன் அறவிடப்பட வேண்டியிருந்த பிணைமுறிப் பெறுமதி ரூபா 3,373,722 ஆகும். பிணைமுறி மீறப்பட்டு 2 ½ ஆண்டுகள் கடந்த பின்னர் அதாவது 2006 மே 22 ஆந் திகதி நிறுவகத்திற்கு அறவிடப்படவேண்டிய பிணைமுறியினை செலுத்துமாறு விரிவுரையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பிணைமுறி அறவிடப்பட்டிருக்கவில்லை. கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு விரிவுரையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையில் ரூபா 2,000,000 இனை 2013 செப்தெம்பர் 22 ஆந் திகதியன்றும் ரூபா 1,370,772 இனை 2014 மார்ச் 22 ஆந் திகதியன்றும் செலுத்துவதற்கு இணங்கப்பட்டதாக நிறுவகத்தின் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.2 நிதியங்களின் குறைப் பயன்பாடு

நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் ஜப்பான் ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து ஊடக தொழில்நுட்ப நிலையம் (Advance Digital Media Technology Centre) மற்றும் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி செயற்திட்டம் (International Development Research Project) என்பவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,197,538 நிதிகள் மூன்று ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பொது முயற்சிகள் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டல்களின் 5 ஆவது அத்தியாயத்தின் 5.1.2 ஆம் ஆலோசனையின் பிரகாரம், 2011-2015 ஆம் காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் நிறுவக சொத்துக்களின் தற்போதைய நிலைமை தொடர்பான கூற்று, நிறுவகத்தில் காணப்படும் பலம், இலட்சியங்கள் மற்றும் அவை தொடர்பில் காணப்படுகின்ற பலவீனங்கள் மற்றும் தடைகளை பகுப்பாய்வு ரீதியாக இனங்கண்டு கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட கூற்று (SWOT Analysis) மற்றும் அண்மைய மூன்று ஆண்டுகளிற்கான செயற்பாட்டு விளைவுகள் மீளாய்வு செய்யப் பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்தந்த செயல்களுக்கான கால எல்லை, எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் பொறுப்புடைய உத்தியோகத்தர்களை வெவ்வேறாக இனங்காணக்கூடிய விதத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த ரூபா 5,500,000 கொள்வனவு நடவடிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

நிறுவகத்தின் 2011 இன் வருடாந்த ஆண்டறிக்கை 2013 யூலை 23 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ் அறிக்கை 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி உயர் கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டதாக நிறுவகத்தின் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**5.4 கணனிக் கற்கைகள் நிறுவகத்தினுள் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை ஸ்தாபித்தல்**

கணனிக் கற்கைகள் நிறுவகம் தாபிக்கப்பட்ட 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 18 (iv) ஆம் பிரிவின் படி கணனி நிலையமொன்றைத் தாபிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் இணங்காத வகையில் கணனிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒத்த நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணனிச் சேவைகள் நிலையத்திற்கு நேரடிப் போட்டித் தன்மைகொண்ட கம்பனியொன்றைத் தாபித்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், முகாமைத்துவச் சபையின் தீர்மானத்தின் படி கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்டதாக “தீக்சன” என்ற பெயரில் கம்பனியொன்றை தாபித்திருந்தமை சட்டத்திற்கு முரணானதாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கணக்கு வைத்தல்

(இ) செயற்திட்ட நிதிகள்

(ஈ) கொள்வனவுகள்

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2013.12.31

கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்
இலக்கம் 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்லை.

ஐயவர்களே,

**கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 2002 இன் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவு ஆகியவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்.**

---

**1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிரயாம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை பொதுத்துறை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும், முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரசட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விளக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 22 ஆம் பந்தியில் விபரிக்கபட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

பதில்: குறித்துக் கொண்டேன்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கூட்டுக் கணக்குகள் தயாரித்தல்

கணினி கற்கைகள் நிறுவகமானது தீக்ஷ்ன எனும் பெயரில் உத்தரவாதத்துடன் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று உருவாக்கப்பட்டிருந்ததுடன், அதன் முகாமைத்துவ சபை நூற்றுக்கு 80 அளவில் கணினி கற்கைகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபை என்பதுடன், அவ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் கணினி கற்கைகள் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றுசேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இந்த தீக்ஷ்ன கம்பனி சம்பந்தமாக எதுவிதமான வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**பதில்:** 2013 ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது தீக்ஷ்ன கம்பனியின் கணக்குகளையும் உள்ளடக்கி கூட்டுச் சேர்ந்த கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முழுமையாக பெறுமானத்தேய்வு புத்தக மீதி பூச்சியமாக்கப்பட்டிருந்தும், ரூ. 2,775,000 கிரயமான பாவணையிலுள்ள வேன் வாகனம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**பதில்:** WP GF 5434 இலக்கமுடைய ரூ. 2,775,000 கிரயமான வேன் வாகனத்தின் புத்தகப் பெறுமதி பூச்சியமென்பதால் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, 2013 ஆண்டின் கணக்குகளில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியினை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

(ஆ) நிறுவனத்தினால் வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒன்பது கருத்திட்டங்களின் மேலதிக தொகையான ரூ. 41,336,035 வருமானமாக கொள்ளுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பாக சில வருடங்களாக முன் கொண்டுவரப்பட்டுள்ளது.

பதில்: நடைமுறைப் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள கருத்திட்ட நிதி மற்றும் அது தொடர்பான பதில் கீழே தரப்பட்டுள்ளது.

| கருத்திட்டம் | 2012.12.31 திகதியில் மீதி | கருத்திட்டத்தின் தற்போதய நிலை | மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|---|
| 1. *SIDA Phd, Networking projects* | 32,133,791 | கருத்திட்டத்தின் இறுதி அறிக்கை வழங்கப் பட்டுள்ளதுடன் SIDA நிறுவனத்தின் கணக்காய்வாளர்கள் இறுதி கணக்காய்வை நிறைவு செய்து இறுதி அறிக்கை 2013.10.11 திகதியில் வெளியிட்டுள்ளனர். | இறுதிக் கணக்காய்வு அறிக்கைக்கான சிபாரிசுகள் SIDA நிறுவனத்திலிருந்து கிடைத்ததன் பின் மிகுதியான தொகை பற்றி கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர்களது சிபாரிசின் படி முகாமை சபையின் அங்கீகாரத்துடன் தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |
| 2. *'Asia @ Bit*<br>3. *Pandora*<br>4. *VET*<br>5. *GIS Project*<br>6. *In Country training Programme* | 1,298,615<br>906,725<br>226,649<br>1,518,739<br>2,625,758 | கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதியான தொகை இவ்வாறு காட்.டப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர்களது சிபாரிசின் படி முகாமை சபையின் அங்கீகாரத்துடன் குறிப்பிட்ட மிகுதித் தொகை 2013 ஆண்டின் வருமானமாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| 7. *JICA* | 2,625,758 | இது மேலே குறிப்பிடப்பட்டுள்ள இல. 6 *In Country training Programme* மீண்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சீராக்கல் செய்து கணக்காய்வு அறிக்கை மீளவும் சமர்ப்பிதற்கு கணக்காய்வாளர்கள் இணங்கியுள்ளனர். |
| | 41,336,035 | | |

(இ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க அட்டுறு கொள்கையடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், விடுதியின் வாடகை வருமானம் நிதி அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக விடுதி வாடகை வருமானம் ரூ. 35,933 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

பதில்: மாணவர்களுக்கான கல்வியாண்டு 2011 ஒக்ரோபர் மாதம் தொடங்கியதுடன், ஆரம்பத்தில் அவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் 2011 ஆண்டின் வருமானமாக எடுக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஆண்டு இறுதியில் பல்கலைக்கழகத்தில் நிலவிய குழப்ப சூழ்நிலை காரணமாக அடுத்த கல்வியாண்டின் ஆரம்பம் 2012 ஆண்டினுள் நிகழ்ந்ததால் 2012 விடுதிக் கட்டண வருமானம் குறைவடைந்து உள்ளது.

(ஈ) நிறுவனத்தினால் 2006 மார்ச் 31 திகதியுடைய 2006 ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் 37(2) ஆம் பிரிவிற்கேற்ப, நிலையான வைப்பு வட்டியிலிருந்து அந்தந்த வருடங்களில் மீளளிப்புச் செய்யப்பட்ட மொத்தம் ரூ. 3,568,155 ஆன நிறுத்தி வைத்தல் வரித் தொகை செலவாக கணக்கு வைக்கப்படுவதை விடுத்து நடைமுறைச் சொத்தாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

பதில்: குறிப்பிட்ட நிறுத்திவைக்கப்பட்ட வரித் தொகை செலவாக 2013 ஆண்டினுள் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மொத்தத் தொகை ரூ. 471,048 ஆன பெறவேண்டிய மீதிகளும் மொத்தத் தொகை ரூ. 4,800,700 ஆன செலுத்தவேண்டிய மீதிகளும் 1 முதல் 8 வரையிலான ஆண்டுக் காலப்பகுதியில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

பதில்: பெறவேண்டிய மீதிகள்

| *கணக்கின் பெயர்* | *தொகை* | *நிறுவகத்தின் பதில்* |
|---|---:|---|
| பெறவேண்டிய நிறுத்தி வைத்தல் வரி | 242,104 | செலவொன்றாக பதவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| ஊழியர் கடன் | 217,587 | சம்பந்தப்பட்ட ஊழியரின் சேமலாப நிதி கொடுக்கப்படாததுடன், அதன் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| பணியாட்தொகுதி கடன் | 11,360 | |
| | 471,048 | |

**செலுத்தவேண்டிய மீதிகள்**

| கணக்கின் பெயர் | மீதிகள் | |
|---|---|---|
| 1. உள்நாட்டு பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் | 2,625,758 | முகாமை சபையின் அங்கீகாரத்துடன் வருமானத்தினுள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| 2. செலுத்தவேண்டிய பாடநெறிக் கட்டணம் | 120,000 | |
| 3. Stipend Payble | 30,000 | |
| 4. பாடநெறிக் கட்டணம் | 1,623,500 | |
| 5. Amalgamated club | 27,351 | சம்பந்தப்பட்ட தரப்பினர்களை அறிவூட்டி குறிப்பிட்ட தொகைகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| 6. மருத்துவக் கட்டணம் | 97,101 | |
| 7. மாணவர் சங்கம் | 53,301 | |
| 8. பீ.கே.எச். திலகரத்ன | 12,500 | |
| 9. ஈ. ஹெட்டிஆரச்சி | 16,337 | |
| 10. நிறுத்திவைக்கப்பட்ட நிதி (Retentions) | 194,612 | |
| | 4800,790 | |

**2.2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

பின்வரும் இணக்கின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**பிரமாணங்களுடன் தொடர்பு** **இணக்கின்மைகள்**

(அ) இலங்கை அரசாங்க நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 394 (அ) | 2010 ஆண்டிலிருந்து நடைமுறைப் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள ரூ. 75,878 பெறுமதியான இரத்துச் செய்யப்பட்ட காசோலை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **பதில்:** வெளிநாட்டு கருத்திட்ட நிதியின் மூலம் வழங்கப்பட்ட ஆனால் சமர்ப்பிக்கப்படாத காசோலையின் கீழ் காட்டப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் வருமானமாக கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | |

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 756 மற்றும் பல்கலைக்கழக தாபக விதிக் கோவையின் xxvi ஆவது அத்தியாயத்தின் 2வது உபபிரிவின் 2.1 | நிறுவகத்தில் காணப்படுகின்ற எல்லா நடைமுறையல்லாத சொத்துக்களும் வருடாந்தம் கணக்கெடுப்பு எடுக்கவேண்டிய போதிலும், கிரயம் ரூ.465,902,538 பெறுமதியான நடைமுறையல்லாத சொத்துக்கள் கணக்கெடுப்புச் செய்து, கணக்கெடுப்பு சபையின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 23 ஆம் திகதி வரையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| பதில்: 2012 இன் பொருட்கள் கணக்கெடுப்பு தொழில்சார் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் வரைவு அறிக்கை எமக்கு கிடைத்துள்ளது. குறிப்பிட்ட சீராக்கல் செய்யப்பட்டு இறுதி அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | |
| (ஆ) 2011 ஏப்பிரல் 4 திகதிய 45ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4(அ) உபபிரிவு மற்றும் உயர் கல்வி அமைச்சின் 2011 சனவரி 20 ஆம் திகதியும் 2011/01 இலக்கமும் கொண்ட கடிதம். | ஆய்வுக் கொடுப்பனவுக்கு உரித்துப் பெறுவதற்காக பல்கலைக்கழக நிலையான குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு முகாமைக்கான குழுவிடமிருந்து ஆய்வு முன்மொழிவுகளுக்காக அங்கீகாரம் பெறவேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக முகாமைத்துவ கலைகள் குழுவின் சிபாரிசு பெறப்பட்டிருந்தது. கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் 25 பேருக்கு மீளாய்வு ஆண்டில் சனவரி முதல் ஒக்ரோபர் வரையிலான காலப்பகுதியில் ரூ. 2,060,529 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| பதில்: நிறுவகத்தின் விரிவுரையாளர் குழாமுக்கு 2011 ஏப்பிரல் மாதம் 20 ஆம் திகதியும் 1/2011 இலக்கமும் கொண்ட உயர் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்கவே ஆய்வுக் கொடுப்பனவு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையின் 4 (அ) உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆய்வுக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள தகைமை பெறுகின்ற விரிவுரையாளர்களால் ஆய்வு முன்மொழிவொன்றைச் சமர்ப்பிப்பதற்கு நிலையான குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு முகாமைத்துவ குழுவை நியமிப்பதற்காக எமது நிறுவகத்தின் கலை குழு மற்றும் முகாமை சபையின் சிபாரிசுடன் கொழும்புப் பல்கலைக்கழக நிலையான குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், தவறுதலாக சிறிது தாமதமாக நிலையான குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (இ) 2002 ஆண்டின் 1ஆம் இலக்க கணினி கற்கைகள் நிறுவக விதிக்கோவையின் 13 ஆம் பிரிவின் 2 (1) (அ) | ஆய்வுக் கொடுப்பனவை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதற்காக ஆய்வு முன்னேற்றம் பற்றிய குழுவொன்றினால் திருப்தியடைதல் அவசியமென்ற போதிலும், விரிவுரையாளர்கள் 07 பேர்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 557,175 |

| | |
|---|---|
| | கொடுப்பனவுக்காக ஆய்வு முன்னேற்றம் பற்றிய குழு திருப்தியடைந்திருக்கவில்லை. |

பதில்: குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 3 (III) உப பிரிவுக்கு ஏற்ப ஆய்வு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும். எதிர்வரும் ஆண்டிற்கான இக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் போது இம் முன்மொழிவுகளின் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்யப்படும்.

| | |
|---|---|
| (ஈ) 2009 யூன் 8 ஆம் திகதிய யூஜீசீ/2/பீஜீஎஸ்/6 இலக்கமுடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடிதம் | பல்கலைக்கழக பட்டப் பின்படிப்பு பாடநெறி கற்பித்தல்களில் ஈடுபடுகின்ற விரிவுரையாளர்களுக்காக ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 2500 வீதம் கொடுக்க வேண்டிய போதிலும், 2012 சனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரை விரிவுரை மணித்தியாலத்திற்கு ரூ. 3000 மற்றும் ரூ. 4000 படி மொத்தமாக ரூ. 2,840,250 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |

பதில்: பட்டப் பின்படிப்பு பாடநெறி – வெளியக விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவு

கணினி தொழில்நுட்ப விஞ்ஞானம் சம்பந்தமாக நடத்தப்படும் MSc கணினிப் பட்டம் எமது நிறுவகத்தைப் போல ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றினாலும் நடாத்தப்படுகின்றது. இப் பாடநெறிக்கு காணப்படும் கேள்வியானது பாடநெறியின் சிறப்பியல்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. பாடநெறியின் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக உள்ளக மற்றும் வெளியக விரிவுரையாளர்களும் ஆட்சேர்த்துக்கொள்ளல் நடைபெறும்.

பாடநெறிகளுக்கான விரிவுரையாளர்கள் வருகை தரல் தீர்மானிக்கப்படுவது அவர்களுக்கு கொடுக்கப்படும் மணித்தியாலத்திற்கான விரிவுரைக் கட்டணத்தின் அடிப்படையிலாகும். வார இறுதி நாட்களில் இப் பாடநெறியினை நிறுவனங்கள் அனைத்தினாலும் நடத்தப்படுவதுடன், கூடிய விரிவுரைக் கட்டணத்தை செலுத்தும் நிறுவனத்திற்கே விரிவுரையாளர்கள் வருகை தருவதற்கு அதிகளவு விருப்பம் தெரிவிப்பார்கள்.

எம்மால் கொடுக்கப்படும் விரிவுரைக் கட்டணத்தில் விரிவுரைகளுக்குத் தேவையான அச்சுக் குறிப்புக்கள் தயாரித்தல், அச்சிடல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய சகல ஆரம்பச் செலவுகள் உள்ளடக்கப்பட்டு இம் மணித்தியால விகிதம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய நிறுவனங்கள் அச் செயற்பாடுகளுக்காக தனித்தனியாக கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. அதாவது, LMS யினைப் பயன்படுத்தி அச்சிட்ட விரிவுரைக் குறிப்புக்களை தயாரிக்கிறது.

இந்த பாடநெறியொன்றினால் ஈட்டப்படும் நிதியில் 60 % மான அளவு பாடநெயியினது செயற்பாடுகளுக்காக செலவிடப்படுவதுடன், மிகுதி 40 % மான அளவு, அதாவது ரூபா 10 மில்லியன் அளவு நிறுவகத்தின் உள்ளக மாணவர்களது விடயங்கள், நிறுவகத்தின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் அதேபோல், ஆய்வு

விடயங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. அதனூடாக அரசாங்கத்திற்கும் உள்ளக பட்டதாரி மாணவர்களுக்காக செலவிடவேண்டிய செலவினை குறைத்துக் கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பாக உள்ளது.

ஏதாவது காரணத்திற்காக இவ்வாறு விரிவுரைக் கட்டணமாக மணித்தியாலத்திற்கு கொடுக்கப்படுகின்ற கட்டணத்தைக் குறைக்கு வேண்டியேற்பட்டால், பாடநெறியினை வெற்றிகரமாக நடாத்திச்செல்வதில் தடங்கல் ஏற்படும் என்பதுடன், அது நிறுவனத்திற்கும் அதேபோல் அரசாங்கத்திற்கும் பெரும் நட்டமாகுமென்பது உறுதியாகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்தையின் போது தீர்மானிக்கப்பட்டவாறு இந்த மணித்தியால விகிதத்தை அதிகரிப்பதற்கான அங்கீகாரத்தைக் கோரி அனுப்பப்பட்டுள்ளது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

--------------------------

சமர்ப்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி, 2012 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூ. 5,650,218 மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூ. 9,569,010 ஆகும். மீண்டெழும் செலவினங்களுக்கான ரூ. 91,802,000 ஆன அரசாங்க மானியம் காரணமாக மீளாய்வு ஆண்டின் மிகை ரூ. 97,452,218 வரை வளர்ச்சியடைந்துள்ளது. முன்னைய ஆண்டின் போது ரூ. 83,102,728 ஆன மீண்டெழும் செலவினங்களுக்கான அரசாங்க மானியம் காரணமாக பற்றாக்குறை ரூ. 73,533,724 மிகையொன்றாக ஆகியிருந்தது. மீளாய்வாண்டிற்காக அரசாங்கத்தின் ரூ. 23,918,500 வளர்ச்சி ஏற்படுவதற்கு மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியம் ரூ. 8,699,272 ஆல் அதிகரித்தமை மற்றும் வருமானம் ரூ. 31,579,250 ஆல் வளர்ச்சியடைந்தமை காரணமாக அமைந்தது.

பதில்: குறித்துக்கொள்ளப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தகுதிகாண் விரிவுரையாளரொருவர் 2005 திசம்பர் 3 ஆம் திகதி சேவையிலிருந்து நீங்கிச் சென்றுள்ளதுடன், உத்தரவாதத்தின் பெறுமதியான ரூ. 798,589 நிறுவகத்திற்கு கிடைக்கவேண்டியிருந்தது. 2006 நவம்பர் 16 ஆம் திகதி முதல் 03 சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபரினால் தகவல்களை கோரியிருந்த போதிலும் வழங்கப்படாத காரணத்தினால் சட்ட நடவடிக்கைகள் பாதிப்படைந்திருந்தது. இந் நிதியை சேமலாப நிதியின் மூலம் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

பதில்: மேற்படி அவதானிப்பு சம்பந்தமாக இணங்க இயலாது. தகுதிகாண் விரிவுரையாளரான திரு. ருக்மன் சேனாநாயக்க நிறுவகத்திற்கு செலுத்தவேண்டிய உத்தரவாதத்தின் பெறுமதி ரூ. 798,588.54 தொகையென்பதுடன், அதனை அறவிடுவதற்காக அவர் சேவையிலிருந்து நீங்கிச் சென்றாரா இல்லையென்றால் அவரால் ஈ அஞ்சல் செய்தி மூலம் அனுப்பப்பட்டுள்ள இராஜினாமாவை ஏற்றுக்கொள்வதா என்பதை நிருவாக சபை மூலம் தீர்மானிப்பதற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நினைவூட்டலும் செய்யப்பட்டுள்ளது. இது வரையும் அது பற்றிய தீர்மானம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினாலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) விரிவுரையாளரொருவர் 2004 ஒக்ரோபர் 1 ஆம் திகதி சேவையிலிருந்து நீங்கிச் சென்றுள்ளதுடன், அறவிடவேண்டிய உத்தரவாதத்தின் பெறுமதி ரூ. 1,311,691 ஆகும். இந்த உத்தரவாதத்தின் பெறுமதியை செலுத்துமாறு விரிவுரையாளருக்கு 2006 ஒக்ரோபர் 10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ள போதிலும் கணக்காய்வு தினம் வரையும் குறிப்பிட்ட கொடுப்பனவு செலுத்தப்பட்டிருக்காததுடன், விரிவுரையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவகம் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பதில்: ஆர்.கே. ராஜபக்ஷ என்ற விரிவுரையாளர் உரிய உத்தரவாதத்தின் பெறுமதியை நிறுவகத்திற்கு செலுத்தாமை தொடர்பில் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகிறது.

(இ) விரிவுரையாளரொருவர் 2004 நவம்பர் 1 ஆம் திகதி சேவையிலிருந்து நீங்கிச் சென்றிருந்ததுடன், அறவிடவேண்டிய உத்தரவாதத்தின் பெறுமதி ரூ. 3,440,576 ஆகும். விரிவுரையாளரின் தற்போதய முகவரியை கண்டுபிடிக்க முடியாமை காரணமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக 2005 ஆகஸ்ட் 31 திகதி சட்டமா அதிபரிடம் அனுப்பப்பட்டுள்ள போதிலும், 8 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நிறுவகத்தினால் சட்டமா அதிபரிடம் விசாரணை செய்யப்பட்டிருக்கவில்லை.

பதில்: திரு. எஸ்.பீ. பஹீரத்ன இறுதியாக வழங்கப்பட்டிருந்த முகவரியை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்துள்ள போதிலும், அவர் தற்போது அவ் வதிவிடத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இற்றை வரை வதிவிட முகவரியைக் கண்டுபிடிப்பதற்கு இயலாதுள்ளதுடன், முகவரியைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் இவ் விடயம் தொடர்பாக தற்போது வரை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தேவையான செயற்பாடுகள் செய்யப்பட்டு வருவதுடன், திரு. பஹீதரன் சார்பில் உத்தரவாதத்திற்கு கையொப்பமிட்ட உத்தரவாதிக்கு வழக்குப் பதிவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(ஈ) விரிவுரையாளரொருவர் 2004 சனவரி 1 ஆம் திகதி சேவையிலிருந்து நீங்கிச் சென்றிருந்ததுடன், அறவிடவேண்டிய உத்தரவாதத்தின் பெறுமதி ரூ. 3,373,722 ஆகும். உத்தரவாத ஒப்பந்தத்தை முறித்து இரண்டரை வருடங்களுக்குப் பின்னர், அதாவது 2006 மே 22 ஆம் திகதி நிறுவகத்திற்கு அறவிடவேண்டிய உத்தரவாதத் தொகையை

செலுத்துமாறு விரிவுரையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உத்தரவாதத் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கினை சமரசத்திற்கு கொண்டுவந்து, விரிவுரையாளரிடமிருந்து அறவிடவேண்டிய தொகையை 2013 செம்ரெம்பர் 22 ஆம் திகதி ரூ. 2,000,000 மற்றும் 2014 மார்ச் 22 ஆம் திகதி ரூ. 1,370,772 செலுத்துவதற்கு இணங்கியுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளரினால் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பதில்: மேற்படி அவதானிப்பு சம்பந்தமாக இணங்கிட இயலாது. இந்த விரிவுரையாளர் தொடர்பாக சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 09841/09 இலக்கம் கொண்ட வழக்கு அவருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கு 2013.03.01 ஆம் திகதி சமரசத்துக்கு வந்துள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சமரச நிபந்தனைக்கு இணங்க திரு. பீ. குணரத்ன –விடமிருந்து அறவிடவேண்டிய ரூ. 3,370,772.36 ஆன தொகை 2013.09.22 ஆம் திகதி ரூ. 2,000,000 –வும், 2014.03.22 ஆம் திகதி ரூ. 1,370,772.36 –வும் என்பதாக செலுத்தி முடிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் அவதானிப்பில் உத்தரவாதத்தின் பெறுமதியாக பெறுமதியாக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 3,373,772 ஆன தொகை சரியான தொகையல்ல என்பதுடன், அது ரூ. 3,370,772.36 என்பதாக அமைதல் வேண்டும்.

அத்துடன், மேற்படி விரிவுரையாளர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட சேமலாப நிதியினை விடுவிப்புச் செய்தல் ஆவணங்கள் யாவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## 4.2 நிதியங்களின் குறைவான பயன்பாடு

----------------------------------------------

நிலையான சொத்துக்களை கைகொள்வதற்காக அரசாங்கத்தினால் யப்பான் ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து உயர் டிஜிடல் ஊடக தொழில்நுட்ப நிலையம் (Advance Digital Media Technology Center) மற்றும் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி கருத்திட்டம் (International Development Research Center) ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. 4,197,538 நிதி மூன்று வருடங்களுக்கும் கூடுதலான காலப்பகுதியிலிருந்து பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் செயற்பாடின்றி வைக்கப்பட்டிருந்தது.

பதில்: ஏனைய கருத்திட்டங்களின் மீதிகள் உரிய ஒருங்கிணைப்பாளர்களின் சிபாரிசின் அடிப்படையிலும் முகாமை சபையின் அனுமதியுடன் குறிப்பிட்ட நிதியை செலவிடுவதற்குத தேவையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 5. கணக்குவைத்தல் பொறுப்பு மற்றும் நல்லாட்சி

## 5.1 கூட்டுத்திட்டம்

அரச பொது முயற்சிகள் நல்லாட்சி பற்றிய வழிகாட்டிக் கோவையின் 5 ஆம் பிரிவின் 5.1.2 உபபிரிவின் பிரகாரம் 2011, 2015 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டுள்ள கூட்டுத்திட்டத்தில் நிறுவகத்தின் சொத்துக்களின் தற்போதய நிலமை பற்றிய கூற்று, நிறுவகத்தின் வசமுள்ள வளங்கள், இலக்கு மற்றும் அவை தொடர்பாக காணப்படும் குறைபாடுகள் மற்றும் இடையூறுகள் என்பவற்றைப் பகுப்பாய்வின் படி அடையாளம் காணுவதற்காக தயாரிக்கப்பட்ட (SWOT Analysis) கூற்று மற்றும் அண்மைய மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு காட்டப்பட்டிருக்கவில்லை.

பதில்: நிறுவகத்தின் மூலம் தற்போது தயாரிக்கப்படும் கூட்டுத்திட்டத்தில் உரிய சட்டதிட்டங்களுக்கு இணங்க தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## 5.2 செயற்பாட்டுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத் திட்டத்தில், அந்தந்த செயற்பாடுகளுக்கான காலப்பகுதி, எதிர்பார்க்கப்படும் நோக்கம் மற்றும் பொறுப்புகூறும் நபர்கள் வேறாக இனங்காணக் கூடிய வகையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

பதில்: நிறுவகத்தினால் 2014 ஆண்டுக்காக தயாரிக்கப்படுகின்ற செயற்பாட்டுத் திட்டம் அந்தந்த செயற்பாடுகளுக்கான காலப்பகுதி, எதிர்பார்க்கப்படும் நோக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் நபர்கள் வேறாக இனங்காணக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூ. 5,500.00 கொள்வனவு நடவடிக்கைகள் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ் அறிக்கை 2013 பெப்பிரவரி 14 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதில்: நிறுவகத்தினால் 2012 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ள விபரமான கொள்வனவுத் திட்டத்தில் கொள்வனவு முன் நடவடிக்கை ஆரம்ப திகதி, முடிவடையும் திகதி மற்றும் கொள்வனவு கேள்வி ஒப்படைக்கும் திகதி, முடிவடையும் திகதி போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அக் கொள்வனவுச் செயற்பாடுகளில் காலப்பகுதி உள்ளடக்கப்பட்டு விபரமாக கொள்வனவுத் திட்டம் நிறுவகத்தின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்கு சமாந்திரமாக 2014 ஆண்டிலிருந்து தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## 5.3 வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பித்தல்

நிறுவகத்தின் 2011 வருடாந்த அறிக்கை 2013 யூலை 23 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் அறிக்கை 2013 பெப்பிரவரி 14 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

பதில்: 2013.02.14 ஆம் திகதி 2011 ஆண்டுக்கான ஆண்டறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக உயர் கல்வி அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது. இச் செயற்பாடு

முடிவடைந்ததன் பின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 5.4 கணினி கற்கைகள் நிறுவகத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை தாபித்தல்

---

கணினி கற்கைகள் நிறுவகம் தாபிக்கப்பட்ட 2002 ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழக கற்கைகள் நிறுவக விதிக்கோவையின் 18 (iv) பிரிவுக்கு இணங்க கணினி நிலையம் தாபிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. 1978 ஆண்டின் 16 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கு முரண்படாத வகையில் கணினி கற்கைகள் நிறுவக விதிக்கோவையில் காட்டப்பட்டுள்ள ஒத்த நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணினி சேவைகள் நிலையத்திற்கு நேரடியாக போட்டித் தன்மை வடிவிலான, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சினதும் அமைச்சரவையினதும் அங்கீகாரத்துடன் செய்யப்பட்டிருக்க வேண்டியிருந்தும் முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் படி கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தீக்ஷ்ன பிரைவட் கம்பனி தாபிக்கப்பட்டமை சட்டத்திற்கு இணங்கியதாக அமையவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

பதில்: சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகங்களால் தமது ஆய்வுப் பெறுபேறுகளை வணிகமயப்படுத்தும் போது (Commercialization) கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கைகளைப் பயன்படுத்தி கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவகத்தின் ஸ்தாபகர் வித்தியஜோதி பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க அவர்களின் ஆலோசனையின் படி இந்த வரையறுக்கப்பட்ட தீக்ஷ்ன கம்பனியை தாபிப்பதற்கு முகாமைத்துவ சபையின் மூலம் அனுமதியளிக்கப்பட்டது.

அதற்கிணங்க 2006 சனவரி 5 ஆம் திகதி நடைபெற்ற 40 ஆவது கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கை நிறுவகத்தின் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு (Memo No.: UCSC/BOM/40/12(1)) இணங்க முடிவு செய்யப்பட்டவை, கணினி சேவைகள் நிலையம் (CSC) கம்பனியொன்றாக தாபிப்பதற்கு ஆராய்தல், அவ்விடயங்களுக்காக ஆலோசனையாளரொருவர் (Consultant) மற்றும் சட்டத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு கம்பனி செயலாளரொருவர் நியமித்தல் வேண்டுமென்பதாகும்.

அதன் பின்னர், 2006 ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற 42 ஆவது முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு (Memo No.: UCSC/BOM/42/10(d)) ஏற்ப, சனவரி 5 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டதன் படி நியமிக்கப்பட்ட ஆலோசனையாளரால் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என்பதாகும். அத்துடன், அவ்வறிக்கையை பரிசீலனை செய்ததன் பின்பு முகாமைத்துவ சபைக்கு கம்பனியை தாபிப்பதற்குத் தேவையான ஆரம்பச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

முகாமைத்துவ சபையானது இவ்விடயத்தில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் தாபிக்கப்பட்டுள்ள கம்பனியை முன்னுதாரணமாகக் கொண்டதுடன், அதன் சட்ட ஆலோசகரினதும் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன், சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகங்களால் தமது ஆய்வுகளின் பெறுபேறுகளை வணிகமயப்படுத்தலின் போது கடைப்பிடிக்கப்படும் உபாயமார்க்கமாக இவ்வாறான கம்பனியொன்றை தாபித்தல் காலத்திற்கான தேவையொன்றாக அடையாளம் காணப்பட்டது.

இந்த தீக்ஷன கம்பனி, கணினி சேவைகள் நிலையத்துடன் எவ்வகையிலும் போட்டி நிலையினை உண்டாக்காது. ஏனெனில், இந்தக் கம்பனியின் ஆலோசனை சேவைகளானது சர்வதேச நிதியங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு மாத்திரமே பெற்றுக்கொடுக்கப்படும் என்பதாகும். அத்துடன், உலக வங்கி நிதியின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ICTA முகவர் நிறுவனத்தின் சிபாரிசின் படி (Recommendation) கம்பனிக்கு கிடைக்கின்ற ஒப்பந்தத்திற்கு ஏற்ப ஆலோசனை சேவைகளை வழங்கும்.

கணக்காய்வு சிபாரிசுகளுக்கு ஏற்ப அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அவ்வவ்போது தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்

**பதில்:** குறித்துக்கொள்ளப்பட்டது.

(ஆ) கணக்கு வைத்தல்

**பதில்:** குறித்துக்கொள்ளப்பட்டது.

(இ) கருத்திட்ட நிதிகள்

**பதில்:** குறித்துக்கொள்ளப்பட்டது.

(ஈ) கொள்வனவுகள்

**பதில்:** குறித்துக்கொள்ளப்பட்டது.

நன்றி.

இங்கனம் – விசுவாசமுள்ள

பேராசிரியர் ஜீ.என். விக்கிரமநாயக்க

பணிப்பாளர்